# THE IDEAL WIFE

## A TAMIL DRAMA

BY

RAO BAHADUR. P. SAMBANDAM, B.A., B.L.,

*Author of:*

The Two Sisters, Galava, The Eye of Love, The Curse of Urvasi, The Merchant of Vanipura, Fate and Love, Simhalanatha, Pushpavalli, Amaladitya, Magapathi, Farces, Siruthondar, The Golden Fetters, True Love, The Bandit Chief, Bricks-Between, At Any Cost, The Fair Ghost, The Wedding of Valli, Brahmin *vs* Non-Brahmin, Vijayarangam, As you like it, Ratnavali, Lord Buddha, The Tragedy of Silence, The Good Fairy, Geetha Manjari, The True Brother, Malävikagnimitra, Chandrahari, The Demon Land, Sabapathy Part I, The Pongal Feast or Sabapathy Part II, A Rehearsal or Sabapathy Part III, Sabapathy Part IV, Blessed in a Wife, The Dancing Girl, Subadra-Arjuna, Karna the Giver, Sahadeva's Stratagem, The Surgeon General's prescription, Vichu's Wife, Sakuntala, Vikramorvasi, The Point of View, The Two Selves, The Tragic Denouement, The Sub-Assistant Magistrate of Sultanpet, Harischandra, Blind Ambition, Markandeya, Sarangadhara, Manohara, The Two Friends, The Knavery of Kalappa. As We Sow-So We Reap, Over Forty Years Before the Footlights Parts I & II, The Tamil Drama etc., in Tamil; and Harischandra, and Yayathi in English.

FIRST EDITION

Madras:

PRINTED BY THE PEERLESS PRESS,

13, THAMBU CHETTY STREET, G. T.

2.00

[All Rights Reserved. 1934 Price per Copy [redacted]]

உ

# உத்தம பத்தினி

இந்த தமிழ் நாடகம்

ராவ்பஹதூர்

**ப. சம்பந்த முதலியார், பி.ஏ., பி.எல்.,**

அவர்களால் இயற்றப்பட்டது.

இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்றத் தமிழ் நூல்கள்:—

லீலாவதி-சுலோசனை, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள், நற்குல தெய்வம், மனோஹரன், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், கள்வர் தலைவன், தாசிப்பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், ரத்னாவளி, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, பிரஹசனங்கள், அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல்பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றாம் பாகம், சபாபதி நான்காம் பாகம், வள்ளிமணம், பேயல்லபெண் மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனா, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாக்னி மித்ரம், விபரீதமான முடிவு, சுல்தான்பேட்டை சப் அஸிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், விக்ரமோர்வசி, முற்பகற் செய்யின் பிற்பகல் விளையும், நாடகமேடை நினைவுகள் முதற்பாகம், நாடகமேடை நினைவுகள் இரண்டாம் பாகம், நாடகத் தமிழ், யயாதி, பிராம்மணனும்-சூத்திரனும், வாணிபுர வணிகன், இரண்டு நண்பர்கள், சத்ருஜித், ஹரிச்சந்திரன், மார்கண்டேயர் முதலியன.

முதற் பதிப்பு

சென்னை 'பியர்லெஸ்' அச்சுக்கூடத்தில்
அச்சிடப்பட்டது

2.00

1934

காபி ரைட்.]

[விலை [redacted]

INSCRIBED

to

THE BELOVED MEMORY

of

MY PARENTS

**P. VIJIARANGA MUDALIAR**

and

**P. MANICKAVELU AMMAL**

and

**Miss SUSILA NAGARATNAM**

(The late daughter of my friend Mr. K. Nagaratnam)

# PREFACE.

This is a social drama of the present day, written on the model of social dramas of Pinero, O. Wilde, etc. The whole action takes place in the course of a few hours in one night.

I wish it to be distinctly understood that though I have used as the names of characters in this drama, names in common use in this Presidency, these names have *absolutely* no reference whatever to any living or dead personages.

I have to re-iterate that all societies, professional and amateur, that desire to stage this or any other drama by me, must take my previous permission by paying to me my usual royalty, otherwise they render themselves liable to be prosecuted before a Criminal Court under the existing Copyright Act.

"PAMMAL LODGE"
G. T. MADRAS.
10th Aug. 1934

P. SAMBANDAM

# உத்தம பத்தினி

## நாடக பாத்திரங்கள்

| | |
|---|---|
| திருஞான முதலியார் ... | ... போலீஸ் சப் இன்ஸ்பெக்டரா யிருக்கும் ஒரு சீமான் |
| பரமாநந்த நாயுடு ... | ... ஆக்டிங் கமிஷனர் உத்தியோ கத்திலிருக்கும் ஒருவர் |
| நாராயண ஐயர் ... | ... ஓர் வயித்தியர் |
| சௌந்தரராஜ முதலியார் | ... திருஞான முதலியாருடைய மாமனார் |
| சந்தானம் ஐயர் ... | ... ஒரு சப் இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ் |
| வெங்கடபதி நாயுடு ... | ... ஓர் வயித்தியர் |
| கேசவன் ... | ... ஒரு போலீஸ் கான்ஸ்டபில் |
| சுப்பிரமணியம் ... | ... திருஞான முதலியார் மகன் |
| நாகரத்தினம் ... | ... திருஞான முதலியார் மனைவி |
| நாய்ச்சியார் அம்மாள் ... | ... நாகரத்தினம் தாயார் |

கான்ஸ்டபில்கள், முதலியோர்.

கதை நிகழ் இடம்—சென்னை.

# உத்தம பத்தினி

## முதல் அங்கம்

### முதற் காட்சி

இடம்—திருஞான முதலியார் வீட்டில் அவரது படுக்கையறை.

காலம்:— இரவு.

ஒருபக்கமாக சீதாகல்யாணம் வரையப்பட்ட படம் இருக்கிறது. அதன் முன்பாக ஒரு வெள்ளித்தட்டில் மல்லிகைப் புஷ்பங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதன் முன்பாக திருஞான முதலியார் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுகிறார்.

தி. ராமா! ராமா! அறிவறிந்த நாள் முதலாக உன் அடி பணிந்து வந்ததற்காக இக்கதியை எனக்கருளினாய்! ஆயினும் அதற்காக உன் மீது நான் கடிந்து கொள்ளவில்லை. உனது திருவுளப்படியே யாகுக! ஆயினும் இந்த ஒருவரம் மாத்திரம் அடியேனுக்கருள். கடினசித்தனாயில்லாது, கருணையோடு என் கடமையை நிறைவேற்றும்படி மனோதிடம் எனக்கருளி, என்னை உன் பாதாரவிந்தத்தில் சேர்த்துக் கொள்! [கைநடுங்க அங்கு வைத்திருந்த புஷ்பங்களை எடுத்து, ஒன்றைத் தன் கண்களில் ஒத்திக் கொண்டு, தன் சிரசில் சூடிக் கொள்கிறார்; பிறகு ஒரு பக்கமாயிருக்கும் மின்சார மணியை அடிக்கிறார்.]

கான்ஸ்டபில். [கீழிருந்து] வந்தேன்!

[கான்ஸ்டபில் கதவண்டை வந்து நின்று செல்யூட் செய்கிறான்.]

தி. நீயா? அவன் எங்கே 706?

கா. அவனுக்கு திடீரென்று ஜ்வரம் வந்து விட்டது. அதன் பேரில் சப் இன்ஸ்பெக்டர் அவுஸ்ட்யூடிக்காக என்னை அனுப்பினார்.

தி. என் கார் தயாராயிருக்கிறதா பார்.

கா. முன்பே போர்ட்டிகோவில் கொண்டு வந்து நிறுத்தி யிருக்கிறது.

தி. சரிதான், நீ போ.

கா. அம்மா மெத்தைக்கு வரலாமா என்று கேட்கச் சொன்னார்கள்.

தி. உம்—குழந்தைகளை முன்பு அனுப்பச்சொல்—பிறகு அவர்களை வரச்சொல்.

[கான்ஸ்டபில் செல்யூட் செய்து போகிறான்.]

மறந்தேன்! [மற்றொரு பக்கமிருக்கும் பீரோவைத்திறந்து அதிலிருந்து ஒரு மருந்து புட்டியிலிருந்த சில துளி மருந்துகளை ஒரு டம்பளரில் விட்டு அதன் பேரில் ஒரு சோடா புட்டியைத் திறந்து கவிழ்க்கிறார்—பிறகு அந்த மருந்து புட்டியை பீரோவில் வைத்துப் பூட்டி விடுகிறார்]

சுப்பிரமணியம். [கதவுக்கு வெளியிலிருந்து] நாயனா—நான் வரலாமா?

தி. வா—கண்ணு.

சுப்பிரமணியம் உள்ளே வருகிறான்.

மணி, எங்கே—உன் தங்கச்சி ?

சு. இத்தினி நாழி முழிச்சிகினு இருந்தா, இண்ணைக்கி உங்க பூஜெரொம்ப நாழியாகவே இப்போதான் தூங்கிவுட்டாள்.

தி. தூங்கட்டும்—எழுப்பாதே. இந்தா உனக்கு வெள்ளிக் கிழமை புஷ்பம். [அவன் பணிந்து வாங்கிக்கொள்கிறான். அவன் முகத்தைச் சற்று நேரம் உற்று பார்க்கிறார்.] இதைக் கொண்டுபோய் உன் தங்கச்சியின் சிரசில் வைத்துவிடு. [அவன் கையில் மற்றொரு புஷ்பத்தைக் கொடுக்கிறார்] அப்புறம்—நீ தூங்கப்போ. நிரம்ப நாழிகையாகி விட்டது.

சு. அம்மா எப்பொழுது வருகிறது என்று கேட்டுக்கொண்டு வரச் சொன்னார்கள்?

தி. நீ போய்—அவர்களை அனுப்பு. [சுப்பிரமணியம் போகிறான்.] இவன் எனக்குப்பிறந்தவன் தான்! சந்தேகமில்லை. முகத்தைப் பார்க்கும்பொழுது தெரிகிறது. எத்தனை வருடங்களாக இவள் இப்படியாக நடந்து வருகிறாள்? சீக்கிரம் வந்து விடுவாள்!—ராமா! ராமா! என் இல்வாழ்க்கையைத் தான் பாழாக்கினையே—என் கடமைப்படிக்கு செய்ய எனக்கு மனோதிடமாவது கொடு!—என் முகம் இப்படியிருக்கலாகாது. [அங்கிருக்கும் குளிர்ந்த ஜலத்தினால் தன் கண்களைத் துடைத்துக்கொள்கிறார்.]

நாகரத்தினம் [கதவின் வெளியிலிருந்து] நான் வரலாமோ?

தி. ராமா! ராமா!—வா—நாகு.

நாகரத்தினம் உள்ளே வருகிறாள்.

நா. இன்றைக்கென்ன காலை முதல் ஒருவாராய் இருக்கிறீர்?

தி. நானா ஒருவாராய் இருக்கிறேன்? நீ தான் ஒரு மாதிரியாய் நடக்கிறாய்.

நா. நானா?

தி. ஆம் நீ தான்—இல்லாவிட்டால் நீ இங்கு வருவதற்குக் கூடவா கேட்டுக்கொண்டு வரவேண்டும்?

நா. நான் கேட்டுக்கொண்டுவராமல் என்ன செய்வது? இத்தனை வருடங்களாக இல்லாமல் இன்றைக்கு மாத்திரம், உங்கள் பூஜை முடிந்தவுடன், என்னை வரவழைத்து என்னிடம் புஷ்பம் முன்பு கொடுக்காமல், குழந்தைகளை அழைத்து அவர்களுக்கு முன்பு கொடுத்தீரே?

தி. உம்—இதற்கென்ன, உன் குழந்தைகளுக்கு முன்பு கொடுத்தாலென்ன, உனக்குக் கொடுத்தாலென்ன?

நா. அதற்காகத்தான் என்றுமில்லாதபடி--இப்பொழுது என்னை—நாகு—என்று அழைத்தீரோ?

தி. அதில் என்ன தவறு? உன் மீது—மிகவும் அன்பாயிருப்பவர்கள் எல்லாம் அப்படித்தானே அழைக்கிறார்கள் உன்னை ?

நா. என்மீது— அன்பாயிருப்பவர்கள் — அழைக்கிறார்களா ?—யார் அப்படி அழைப்பது ?

தி. ஏன்—நோயாயிருக்கும்—உன்—தாயார் அழைக்கவில்லை ?

நா. என் தாயார் அழைக்கிறார்கள்.—ஆயினும் நீங்கள் அவ்வாறு என்னை அழைக்க வேண்டாம்.

தி. பிறகு என்னவென் றழைப்பது ?

நா. இத்தனை வருடங்களாக என்னை எப்படி அழைத்தீர் ?

தி. எனக்கு—சரியாக—ஞாபகமில்லை.

நா. நான் அந்த வார்த்தையை நம்பவில்லை என்று கூறுவதற்காக—என்னை மன்னிக்கவேண்டும். ஒன்பது வருடங்களுக்கு முன்பாக இந்த அறையில் தமது நிஷேக முகூர்த்தத்தினம் முதலில் என்னை முத்தமிட்டபொழுது என்னை என்னவென்றழைத்தீர் ? அது முதல் இது வரையில் கண்ணே என்று தவிர எப்பொழுதாவது என்னை என் பெயரிட்டழைத்ததுண்டா ? அப்படியிருக்க இன்று மாத்திரம் நாகு என்றழைக்கவேண்டிய காரணம் என்ன ? என்னை ஒன்றும் தெரியாதவள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஒரு விதத்தில் அது வாஸ்தவம் தான்—உம்மைப்போல் மனிதர்களுடைய முகத்தைப் பார்க்கும் பொழுதே இவன் குற்றவாளி இவன் குற்றவாளியல்லவென்று அறியும்படியான சக்தி எனக்கில்லாவிட்டாலும், உம்முடைய மனதில் ஏதோ கவலை கொண்டிருக்கிறீர் என்பதை அறிவேன் நான்—இரண்டு மூன்று நாட்களாக இது சந்தேகமாகயிருந்தது—இன்று காலை முதல் ஊர்ஜிதமாயது—அது இன்னதென்று என்னிடம் சொல்லலாகாதா ? நான் உம்முடைய பத்தினியல்லவா ?

தி. ஆம் ! ஆம் !— [ஒருவாறு நகைக்கிறார்.]

நா. என்ன நகைக்கிறீர்கள் ?

தி. ஒன்றுமில்லை.

நா. சரி— உம்மிஷ்டம். அதைச் சொல்லாமற் போனுற்போகிறது. இன்று ஏன் அபூர்வமாக, நமது நிஷேகதினத்தில் நான் உடுத்திய ஆடையாபரணங்களுடன் இங்கு வரவேண்டும் என்று கட்டளையிட்டீர்? அதையாவது சொல்லும். ஒன்பது வருடங்களுக்கு முன் அன்றிரவு என்னைப்பார்த்த பொழுது உமக்கிருந்த சந்தோஷம் இப்பொழுதிருக்கிறதா? எப்படி யிருக்கும்? ஒன்பது வருடமாகி கிழவியாகி விட்டேனே நான்!

தி. [அவளை உற்றுப் பார்த்து] ராமா! ராமா! இல்லையே! இல்லையே! அன்றிருந்ததை விட பதின் மடங்கு அதிக அழகாய்த் தோன்றுகிருயே! தோன்றுகிருயே!

நா. அது உமக்கு வருத்தத்தை தருகிறதா? அன்று உமக்கு பரம சந்தோஷத்தைத் தந்த உருவம் இன்று உமக்கு பரம துக்கத்தைத் தருவானேன்?—என்னிடம் சொல்லலாகாதா? [அருகில் நெருங்குகிருள்.]

தி. தூர நில்.

நா. இதென்ன இது!— [பயத்தினுல் நடுங்கி நிற்கிருள்.]

தி. என் முகத்தை ஏறெடுத்துப்பார்!

[அப்படியே நாகரத்தினம் செய்ய]

உம்!—ராமா! ராமா!—உன் ஒட்டியாணத்தை ஏன் போட்டுக்கொண்டு வரவில்லை?

நா. உங்களுக்குத்தான் முன்பே சொன்னேனே! நான்கு மாதங்களாகிவிட்டன, இப்பொழுது அதைப்போடுவதென்ருல் கொஞ்சம் கஷ்டமாயிருக்கிறது.

தி. உம்—கஷ்டமாயிருக்கிறதா—அதையும் போட்டுக்கொண்டு வா—சீக்கிரம் வா.

நா. உங்கள் உத்திரவுபடி [போகிருள்.]

தி. ராமா! ராமா! [ஸ்ரீராமர் படத்தருகிலிருக்கும் நாற்காலியில் வீழ்ந்து தேம்பி அழுகிருர்.] ராமா! அஹல்யையின் உருவத்

தைச் சிருஷ்டித்ததுபோல் இவளது உருவையும் சிருஷ்டித்தாயா ?—இப்படி அவளது ரூபத்தைப்பார்த்துக் கொண்டிருப்பேனாயின் எனக்கு பயித்தியம் பிடித்துப்போம்!—ராமா! என் கடமையைச் செலுத்தும்படியாக எனக்கு மனோதிடம் அருள் !—அதோ வருகிறாள்.

[கண்களைத் துடைத்துக் கொள்கிறார்.]

நாகரத்தினம் மறுபடி வருகிறாள் ஒட்டியாணத்தைப் பூண்டு.

நா. இப்போழுது உமது மனம் திர்ப்தியாகி விட்டதா ?

தி. மிகவும்—திர்ப்தியாகி விட்டது !

நா. ஆனால் இனியாவது உமது மனதிலிருக்கும் குறையைக் கூறுமே ? இந்த முகத்துடன் உம்மைப்பார்க்கும் ஒவ்வொரு க்ஷணமும் எனக்கு என்ன மனவருத்தத்தைக் கொடுக்கிறது தெரியுமா உமக்கு ? குற்றவாளியாகிய கைதிகளை நீர் விசாரிக்கும்பொழுது உம்முடைய முகத்தை இரண்டொரு சமயம் பார்த்திருக்கிறேன் ! அப்படியிருக்கிறது உமது முகம்! எனக்கேதோ மிகவும் திகிலாயிருக்கிறது —கண்ணு!—இத்தனை வருடங்களாக உம்மிடமிருந்து—ஏதாவது—நான் ஒளித்தேனா ? நீர் மாத்திரம் இதை என்னிடமிருந்து ஒளிக்கலாமா ?

தி. இந்த ஒன்பது வருடங்களாக என்னிடமிருந்து ஒன்றும் நீ ஒளித்ததில்லையே ?

நா. இல்லை. [தலையைக் குனிந்து கொள்கிறாள்]

தி. ஏன் தலை குனிந்து கொள்கிறாய்? என்னை ஏறெடுத்து பார்த்துச்சொல் !

நா. [நேராகப் பார்த்து தழதழப்புடன்] இல்லை!—

தி. பொய் ! பொய் ! [அவளருகில் நெருங்கி பிறகு தன்னைத் தடுத்துக் கொண்டு முகத்தைத் திருப்பி] ராமா ! ராமா ! உம் !—சீச்சீ—விளையாடினேன். நீ பொய் பேசமாட்டாய் எனக்குத் தெரியுமே ! இந்த நாற்காலியில் உட்கார்.

[சற்று தூரத்தில் நாற்காலியைப் போடுகிறார்,

நாகரத்தினம் அதில்உட்கார்ந்த பின், தானும் ஒரு நாற்காலியில் சற்று தூரத்தில் உட்கார்ந்து]

உன் மீது நான் ஏதோ கோபித்தேன் என்று நினையாதே—கண்ணு—

நா. அப்பா! அந்த வார்த்தை உமது வாயினின்றும் வந்தபின் எனக்கு கோபம் என்பது எங்கிருந்து வரும்! கண்ணு—இப்பொழுதாவது உமது மனதிலிருப்பதைச் சொல்லும்.

[தன் நாற்காலியை விட்டெழுந்து அவரருகில் நெருங்கப் பார்க்கிறாள்.]

தி. என் கண்ணல்ல—அப்படியே உட்கார்! உன்னை நான் ஒன்று வேண்டிக்கொள்ளப்போகிறேன்—அதன்படி—என்னைக் காரணம்—ஒன்றும் கேளாமல்—செய்கிறாயா?

நா. ஆகட்டும்! அப்படியே! என்னையேன் அப்படிப்பார்க்கிறீர்? நான் உமது வார்த்தைக்குக் குறுக்காக எப்பொழுதாவது நடந்ததுண்டா?

தி. சிச்சி! நடந்ததே யில்லை! பதி சொல்தவறாத என்பத்தினியாச்சுதே! என் கண்ணினியகாதலியாச்சே! கற்புடைய மனைவியாச்சே!

நா. ஐயோ! உமது வார்த்தைகள் நயமாயிருந்தபோதிலும்—அவைகளைக் கேட்கும்பொழுது எனக்கு மிகவும் திகிலைத் தருகின்றன.

தி. நான் சொன்னபடி செய்கிறேன் என்று சத்தியம் செய்.

நா. ஆகட்டும்—சத்தியமாக!

தி. நீ பூஜித்து வரும் துளசிமாடத்தின் மீது சத்தியம் செய்.

நா. அப்படியே! ஆகட்டும் சத்தியமாக!—

தி. அதிருக்கட்டும். உன்னைக் கேட்க மறந்தேன்—இன்று வெள்ளிக்கிழமை யல்லவா? இன்று உன் துளசி பூஜை முடிந்ததும் கடைசியாக தேவியிடம் என்ன வரம் கேட்டாய்?

நா. வழக்கத்தைப்போல்—நீங்கள் எனக்கு எந்த ஜன்மத்திலும் புருஷனாயிருக்கவேண்டும் என்று கேட்டேன் !

தி. அட்டா ! நிரம்ப சரி [ஒரு விதமாகச் சிரித்து] நிஜத்தைச் சொல் இன்னும் என்ன கேட்டாய்? அந்த தேவியின் மீது ஆணைப்படி சொல் !

நா. [கலவரத்துடன்] என் பிறந்த வீட்டிலிருக்கும்—நோயாளி—என் தாயார்—ஸ்வஸ்தமாக வேண்டும் என்றும் பிரார்த்தித்தேன்.

தி. [திடுக்கிட்டெழுந்து] பாத—ராமா! ராமா! [கோபத்தைத் தடுத்துக்கொண்டு] உம்! சரியான பிரார்த்தனை! அப்படிப் பிரார்த்திப்பாய் என்று நானும் நினைத்தே கேட்டேன்—கண்ணு—என் கட்டளைப்படி செய்கிறதாக சத்தியம் செய்திருக்கிறாயல்லவா?

நா. ஆம்.

தி. உடனே இப்படியே—என் காரில் ஏறிக்கொண்டு—மயிலாப்பூருக்குப் போய்—உன் தாயாரிடம்—உண்மை தெரிந்துவிட்டது என் புருஷனுக்கு!—இனி என்னைத் தன் வீட்டில் அடியெடுத்து வைக்கவேண்டாம் என்று சொல்லி இங்கு அனுப்பிவிட்டார்—

நா. ஐயோ !

தி. [கோபத்துடன்] ஸ் ! குறுக்கே பேசாதே ! [சாந்தமனதுடையவர் போல்] பிறகு மெத்தையின் மீதிருக்கும்—நோயாளியிடம் போய்—நம்முடைய ரகசியத்தைக் கண்டு பிடித்துவிட்டார்—

நா. ஐயோ ! ஐயோ ! [அவர் காலில் வீழ்ந்து] அவரைக்காப்பாற்றும் ! அவரைக்காப்பாற்றும்.

தி. தீண்டாதே என் காலை ! பாதகி ! அப்பாதகனைக்காப்பாற்றும்படி கேட்கிறாயா ? —என் கண்ணெதிரில் !—வெட்கமின்றி !— [மஞ்சத்தின் தலையணையின் கீழிருக்கும் கைத்துப்பாக்கியை விரைந்தெடுத்து அவளைச் சுடத்

திரும்பும்பொழுது ஸ்ரீராமருடைய படத்தைப்பார்த்து திடீரென்று அசைவற்று நின்று]

ராமா! ராமா! [கைத்துப்பாக்கியை கீழே எறிந்து விட்டு மஞ்சத்தின் மீது வீழ்ந்து புலம்புகிறார்.]

ஸ்திரீ ஹத்தி செய்யாதபடி என்னைக்காப்பாற்றினாய்! உன் கருணையினால்—அவ்வண்ணமே என் கடமையை நிறைவேற்றும்படி மனோதிடத்தைக் கொடு.

[எழுந்து கைத்துப்பாக்கியை எடுத்து, அதிலிருந்த குண்டுகளையெல்லாம் எடுத்து விட்டு அதைத் தன் பீரோவில் வைத்துப் பூட்டுகிறார்.]

நா. தேவி! நீ தான் காப்பாற்றவேண்டும்!—அவருக்கு—ஒரு கெடுதியும் செய்யமாட்டீரே?

தி. [அவளை உற்று பார்த்து] நாகு! உனக்கென்ன பயித்தியம் பிடித்துவிட்டதா? இப்படிப்பட்ட ஸ்திதிக்கும் இழிவாயென்று நான் அந்த ராமனே வந்து என்னெதிரிற் கூறிய போதிலும் நம்பி யிருக்கமாட்டேனே!—ராமா! இதுவோ என் தலையில் எழுதிவைத்த கதி! இதனினும் கேடான கதி எனக்குக் கொடுக்க உன்னால் முடியாதே! என்கடமையை நான் நிறைவேற்றுகிறேன்!—நாகு! வா இப்படி உட்கார்—பயப்படாதே! உனக்கொன்றும் கெடுதி செய்யமாட்டேன். உங்களிருவர் மீதும் குற்றமில்லை! நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்களிருவரையும் இப்படிப்பட்ட ஜன்மங்களாக படைத்தானே! இந்த ஸ்ரீராமன்!—அவன்—பாரம்!

நா. ஐயோ! நீங்கள் சொல்வது எனக்கொன்றும்—அர்த்தமாக வில்லையே!

தி. ஆகாது! ஆகாது! எப்படியாகும்! நான் சொன்னபடி செய்வதாகப் பிரமாணம் செய்திருக்கிறாய் ஞாபகமிருக்கிறதா?

நா. இருக்கிறது.

தி. ஆகவே—அக்காதகனிடம் போய்!—சீச்சீ! என்ன! என்னை மறந்து பேசுகிறேன். அவனைப் புண்ணிய புருஷன் என்று கூறவேண்டும்!—அவன் எவ்வளவு புண்ணியம் செய்திருக்க

வேண்டும்—உன் காதலைப்பெற! உன் காதலைப் பெற! உன் காதலனிடம்போய்—

நா. [திடுக்கிட்டு] ஓ! இப்பொழுது தெரிகிறது!—இப்படியா நினைத்தீர்!

தி. ஸ்! பேசாதே குறுக்காக! நான் சொல்லும் வார்த்தைகளை கவனமாய்க்கேள் — அப்படியே ஒவ்வொரு வார்த்தையும் விடாது—நீ என்ன சொல்லவேண்டும் தெரியுமா?—"ஒன்பது வருடங்களுக்கு முன், அக்னி சாட்சியாய், என் தகப்பனார், தனக்குத்தாரமாக, தாரை வார்த்துக் கொடுத்த, என்னை—உமக்கு இன்று முதல்—தாரமாகத் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டார் என் கணவன்! இனி நாம் இரகசியமாய் பயத்துடன் இருக்கவேண்டிய தில்லை—பயிரங்கமாயிருக்கலாம்!—இனி இந்த நோயாளி வேஷத்தைக் களைந்து விடுங்கள் என்று சொல்"—போ!—போ!—போ!

நா. ஐயோ!—நான் என்ன பாபம் இழைத்தேன்—இந்த வார்த்தைகளை—உமது வாயினின்றும் கேட்க!

தி. நீ—ஒரு பாபமும் செய்யவில்லை! நீ புண்ணியம் செய்தவள்-நீ சுகமனுபவிக்கிறாய்! நானன்றோ—கொடிய பாபி! இந்த வேதனையை அனுபவிக்க—சாமளவும்!

நா. அந்தோ! நான் சொல்லுவதைச் சற்று கேளுமே! கொஞ்சம் கேளுமே!—

தி. எல்லாம் கேட்கிறேன்!—மனநிம்மதியாய்! என் கடமையை நிறைவேற்றி விட்டேன்! ஆயினும் ஒரு கடைசி வேண்டுகோள்—நாளை காலை எப்படியாவது தயவு செய்து அந்தப் புண்ணிய புருஷனை — அழைத்துக்கொண்டு வேறெந்த ஊருக்காவது போய்ச்சேர்! என் கண்ணெதிரில் இனி இருவரும் படாதீர்கள்! இப்பொழுது ராமனருளால் எனக்கிருக்கும் மனோதிடம் எப்பொழுதும் இருக்குமோ என்னவோ?—சீச்சீ! வேண்டாம் அப்படிச் செய்யாதீர்கள்—நாளையன்று புறப்பட்டுப் போங்கள்—நாளைக்கு நீ உன்—தாயார் வீட்டிலேயே யிரு-எப்பொழுது என்னைக் கொண்டு

போவார்களோ தெரியாது—எப்படியும் போஸ்ட்மார்டம் செய்து பார்ப்பார்கள்—சாயங்கால மாகும்—ஆ! அதை எழுத மறந்தேன்! [மேஜையின் மீதிருக்கும் புஸ்தகத்தில் ஏதோ குறித்துக்கொண்டு]

உம்! பல்லக்கில் என் முகத்தை மேற்குபுறம் உங்கள் வீட்டைப்பார்த்தபடி திருப்பிவைக்கும்படி என் நண்பர்—ஸ்ரீனிவாச முதலியாருக்கு உத்தரவு செய்கிறேன்—அவர் எப்படியும் என் வேண்டுகோளின்படி செய்வார்—அம் முகத்தைக் கடைசி முறை பார்த்து விட்டு—தலை முழுகி விட்டு—

நா. தேவி!—தேவி! பேசமுடியவில்லையே — மார் அடைக்கிறதே! [மூர்ச்சையாகிக் கீழே விழுகிருள்.]

தி. ஹா! [அவளை வாரி எடுக்கப் போய், டீடிரென்று தன்னைத் தடுத்துக்கொண்டு]

உம்! அன்னியன் பொருளை நான் தீண்டலாகாது! மூச்சு வருகிறது—மூர்ச்சையானாள் போலும்!-என்ன ஆச்சரியம்! இப்பதினெட்டு வருடகாலமாக குற்றவாளிகள் எவ்வளவு தான் மறைக்க முயன்றும், அவர்களது குற்றத்தை அவர்கள் முகக்குறிப்பினால் தவறாது அறிந்த நான்—இவள் முகத்தைப்பார்க்கும் பொழுது— இவள் குற்றவாளி என்பதை ஏன் அறிய முடியாமலிருக்கிறது?—சீ! இன்னும் இப்படியே கொஞ்சநேரம் இவளது முகத்தை உற்றுப் பார்ப்பேனாயின் என் மனோதிடமெல்லாம் பறந்துபோம்! [முகத்தைத் திருப்பிக்கொண்டு]

ராமா! ராமா! என் கடமையில் பெரும்பாகம் தீர்த்து விட்டேன், மிகுதியையும் தீர்க்க வெனக்கு மனோதிடம் கொடு!

நா. [பாதி மூர்ச்சையில்] கண்ணு! அப்படியே கெட்டியாகக் கட்டிக்கொள்ளுங்கள்—உங்கள கையை எடுத்து விட்டால் —நான் தூங்கமாட்டேன்!—ஏன் எடுத்து விட்டீர்கள்? எங்கே உங்கள் கை? [அவள் எழுந்திருக்கிருள்] நான் உறங்குகிறேனா? கனவு கண்டேனா? கண்ணு! நிரம்ப நாழியாகி

விட்டாற் போலிருக்கிறதே! நாம் படித்துக்கொள்ளப் போகலாமா? [தன் கணவனை நெருங்குகிறாள்.]

தி. காதகி! நில் அங்கேயே! தீண்டாதே என்னை—அந்நியனைத் தீண்டிய கரத்தினால்!

நா. ஐயோ! ஐயோ! அதெல்லாம் கனவல்லவே! கனவல்லவே! காதலி என்று அழைத்த வாயால் காதகி என்றழைக்கக் கேட்கவேண்டி வந்ததே!—தேவி! தேவி! இச்சமயம் என்னைக் கைகொடுத்துக் காப்பாற்றும்! காப்பாற்றும்!—நான் உண்மையைச் சொல்கிறேன்—கொஞ்சம் தயவு செய்து—என் மீது கோபியாமல் கேளுமே—கண்ணு!—

தி. ராமா! ராமா!—உண்மையை—ஒருவார்த்தையும் ஒளியாது சொல்—கேட்கிறேன்.

நா. கண்ணு! அவ்வளவு போதும்—

தி. ஸ்! ஆனால் ஒரு நிபந்தனை! என்னை இனி கண்ணு என்று—அழையாதே!

நா. ஐயோ! இதையும் உமது வாயினின்றும் கேட்க நான் எந்த ஜன்மத்தில் என்னபாபம் செய்தேனோ?

தி. இந்த ஜன்மத்திற் செய்த பாபமேபோதும்! வேறு ஜன்மத்தின் பாபத்திற்குப் போவானேன்?

நா. கண்ணே! கண்ணே! இன்னும் அதையே சொல்லுகிறீர்களே! கண்ணே! கண்ணே!

தி. ஸ்! மறுபடியும் பார்! என்னை அப்படி அழைக்க வேண்டாமென்று கட்டளை யிட்டேனா இல்லையா?

நா. [நடுநடுங்கி] இட்டீர்கள்! இட்டீர்கள்! ஆயினும் உங்களை வேறு நான் எப்பெயர் இட்டழைப்பது! இது ஒன்று தான் எனக்குத் தெரியும்—இந்த ஒன்பது வருடகாலமாக! வேறே அழைக்க எனக்கு வார்த்தை இல்லையே! இல்லையே!

[துக்கிக்கிறாள்.]

தி. நான் சொல்லிக்கொடுக்கிறேன்—மண்ணே என்றழை! இன்னும் இருபத்தி நான்கு மணிக்குள்—மண்ணுடன் மண்ணாயிருப்பேன்— [முகத்தைத் திருப்பிக்கொண்டு துக்கிக்கிறார்.]

நா. ஐயோ! ஐயோ! [தேம்பி அழுகிறாள்] தேவி! எனது ஐந்தாம் வயது முதல், என் தாயார் உன்னைத் துளசி மாடத்தில் ஆவாஹனம் செய்து பூஜை செய்யக் கற்றுக்கொடுத்தது முதல், உன்னை நான் திரிகரண சுத்தியாய் பூஜை செய்து வந்தது சத்தியமானால்—என் கணவன் என் மீது கொண்ட சந்தேகத்தை நீக்கி—அவருக்கு நான் கனவிலும் துரோகம் நினையாதபத்னி என்பதை—நான் சொல்லும் வார்த்தைகளை நம்பி—அவர் அறியச் செய்யும்.

தி. ராமா! நான் ஒருவேளை தவறாக நினைத்திருக்கக் கூடுமா? எப்படிப்பட்ட கொடுங் குற்றவாளியையும், அவன் சொல்வதைக் கேளாது, குற்றவாளி என்று தீர்மானித்து விடலாகாது—கண்ணு, இப்படி வந்து உட்கார்? ஐயோ! எனக்கென்ன பயித்தியம் பிடித்து விட்டதா? இன்னும் அந்த பழய வழக்கம் போகவில்லையே! போகவில்லையே!

நா. ஐயோ! அந்த பழய வழக்கம் போகாதிருக்கவேண்டுமே! போகாதிருக்கவேண்டுமே!

தி. சீ! நேரமாகிறது—என்மனத்தைத் திடப்படுத்திக் கொள்ள வேண்டும்-அவள் சொல்ல விரும்புவதையெல்லாம் கேளாது -நான் தீர்மானித்து விடலாகாது-நிற்காதே! இப்படிவா!-உட்கார் இந்த நாற்காலியின் மீது-என்னை ஏறெடுத்துப்பார்—நீ சொல்லவிரும்புவதையெல்லாம் ஒருவார்த்தையும் விடாது—சொல்—பொய் மாத்திரம் பேசாதே!—பொய் பேசினையோ! இந்த டம்பளரில் ஒன்றிருக்கிறது அதை உன் எதிரில் குடித்து விட்டு என் தந்தை தாயார்களிடம் போய்ச் சேர்வேன்!

நா. உங்கள் தந்தை தாயாரிடமா!

தி. ஆம்! நான் பிறந்த மூன்றாம் நாள் என் தந்தை தாயர் பீபில்ஸ் பார்க் தீயில் இறந்த விஷயம் உனக்குக் கூறியிருக்

கின்றேனே!—ஆகவே எனக்கு தந்தை தாயர்—நான் தினம் பூசித்து வரும் ஸ்ரீராமனும்சீதா தேவியுமே! ஆகவே அவர்களிடம்—வைகுண்டம் போய்ச் சேர்வேன். ஆகவே, எல்லாவற்றையும் சொல்—பொய் மாத்திரம் பேசாதே என் எதிரில். ஆரம்பி— [அவள் பக்கமாகச் சற்று தூரத்தில் தன் நாற்காலியை இழுத்துக்கொண்டு உட் காருகிறார்.]

நா. அப்படியே ஆகட்டும்—ஒரு சிறிய வரம் மாத்திரம் கொடுங் களேன்?

தி. என்ன அது? முன்புசொல்! பிறகு ஏதாவது கேட்டு என்னை ஏமாற்றினால்—

நா. ஐயோ! நான் உங்களை எப்பொழுதாவது ஏமாற்றின துண்டா?

தி. சீச்சி! நான் பொய் பேசலாகாது! இல்லை நீ என்னை மணந்த நாள் முதல் விளையாட்டிற்கும் ஏமாற்றினதில்லை! இந்த ஒரு விஷயத்தில் தவிர!

நா. தேவி! தேவி! நான் இவரை எப்படி நம்பும்படிச் செய்யப் போகிறேன்!

தி. மிகவும் சுலபம்!—உண்மையைப் பேசினால்—எப்படியும் நம்புவேன்—உனக்கு பயமேன்?

நா. ஐயோ! அதல்லவே! நீங்களோ மிகவும் கற்றுணர்ந்த புத்தி சிரேஷ்டர் என்று எல்லோராலும் புகழப்பட் டவர்—நானோ—ஒன்றும் அறியாத பேதை—உண்மையைச் சொன்னபோதிலும்—அதை நீங்கள் நம்பும்படிச் சொல் லும்படியான சக்தி எனக்கிருக்கவேண்டுமே—நான் ஒரு வரங் கேட்டேனே! [அணுகுகிறாள்.]

தி. தூர நின்று—அது இன்னதென்று சொல்—என்னால் கொடுக்க முடியுமானால் கொடுக்கிறேன்.

நா. வேறொன்றுமில்லை—நான் கேட்பதற்காக—என் மீது கோபித்துக் கொள்ளாதீர்—நான் ஜ்வரத்துடனிருக்கும் பொழுதாவது அல்லது வேறு எக்காரணத்தினாலாவது

மிகவும் பயந்தால்—"ஒன்றும் பயப்படாதே! என்னை சேர்த்துக்கட்டிக்கொள் உன் பயமெல்லாம் போய் விடும்" என்று எனக்கு எத்தனை முறை—உமது கனிவாயால் கூறியிருக்கிறீர்கள்!—அப்படியே நடந்துமிருக்கிறது! ஆகவே—இச்சமயம் அவ்வாறு செய்ய—கொஞ்சம் தயவு புரியுமே!—

[நெருங்குகிருள்.]

தி. நில்! தூர! க்ஷணத்தில் ஏமாறப் போனேன்!—ராமா! ஸ்திரீகளுக்கு இவ்வளவு சாஹசத்தை ஏன் கொடுத்தாய்? என்னைப் போன்றவர்களை ஏமாற்றவா?

நா. ஐயோ! இது சாகசமில்லையே! சத்தியமாய்க் கூறுகிறேன்—நீங்களே பாருங்கள்—என் உடலெல்லாம் என்ன நடுங்குகிறது!—நடுங்குகிறது!

தி. ஆம்—வாஸ்தவம்! ஆயினும் இந்தவரம்—கொடுக்க என்னால் முடியாது—வேறு எதையாவது கேள்!

நா. அந்தோ! வேறு என்ன கேட்கத் தெரியுமெனக்கு?—உங்கள் கரத்தையாவது பற்றிக்கொண்டு பேசுகிறேனே! அப்பொழுதாவது எனக்குக் கொஞ்சம் தைரிய முண்டாகும்—

[அவர் கரத்தை மெல்லப் பற்றப் பார்க்கிருள்.]

தி. தீண்டாதே அக்கரத்தை! அந்த சுதந்திரம் உனக்குக் கிடையாது.

நா. கிடையாதா?—கிடையாதா?—நான் அவ்வளவு பாபியா? நான் ஒரு பாபமுமறியேனே! என்னை அக்னிசாட்சியாய் மணந்த பொழுது, என் கரங்களைகளைப்பற்றிய உமது கரத்தைத்—தீண்ட—எனக்குச் சுதந்தரமில்லையா?

தி. இல்லை!—ஒரு வாரத்துக்கு முன்பு இருந்திருக்கலாம்—இப்பொழுது இல்லை.

நா. ஐயோ! நான் அப்படிப்பட்ட காதகியா! போனமாதம் அந்த பிராம்மணவிதவை தான் பெற்ற சிசுவை மரிக்க விட்டதற்காகக் குற்றஞ் சாற்றப்பட்ட பொழுது, அவள் தனது குறையினை யெல்லாம் கூறி வேண்டினுளென்று, அவள் மீது குற்றத்தை ருசு செய்து அவள் குற்றவாளி யென்று

கோர்ட் முன்பாகத் தீர்மானிக்கும்படிச் செய்தும், பிறகு அவனுக்காக மனமிரங்கி, நீரே நியாயவாதியுடன் மன்றாடிப் பேசி, அவனை கவர்ன்மெண்டார் மூலமாக மன்னித்து விடும்படி பிரயத்னம் செய்து, ஊரிலுள்ளவர்களெல்லாம் உமது தயாளத்தைப் புகழும்படி செய்தீரே, ஞாபகமிருக் கிறதா? அவள் உமது கரத்தைப்பற்றி வேண்டப் போறுத் தீரே அச்சமயம்? அவளைப் பார்க்கினும் நான் கொடும் பாவியாகி விட்டேனா? கண்ணு—உங்கள் கரத்தை நான் தீண்டலாகாதென்று உமது வாயால் சொல்ல, உமக்கு மனம் வந்ததே!—

தி. இதையெல்லாம்—கேட்டுக்கொண்டிருப் பேனுயின்—என் தீர்மானம் பறந்து போகும்—நாகு! உன் மீதாணை—நான் உத்திரவு கொடுக்குமளவும்—என் கரத்தைத்—தீண் டாதே!

நா. அம்பட்டும்—சந்தோஷம்—

[சரேலென்று அவர் பாதத்தில் வீழ்ந்து அவரது இரு பாதங்களையும் பற்றி]

உம்முடைய பாதங்களே எனக்கு சரணுகதி!

தி. ராமா! ராமா!—நான் என் செய்வேன்?—என் செய் வேன்?—ராமா! ராமா!

நா. ஆம், நீர் எந்த ராமரைத் தினம் தொழுகிறீரோ, அந்த ராமர் என்ன செய்தார் என்று யோசித்துப்பாரும் சற்று. காகாசுரன், தன் மனைவியின் மார்பினைக்கீறியவனுயினும், அவன் வேறுகதி யில்லை யென்று அவர்பாதம்தான் சரண மென்று அவர்காலைப்பற்றினபோது-அவனையும் தன் பாதங் களைப்பற்ற விட்டார்—சத்தியமாக ஒரு பாபமுமறியாத நான், உமது பாதங்களைப்பற்றலாகாதா? உமக்கு மன மிருந்தால்—உதைத்துத் தள்ளும் என்னை!

தி. ஐயோ! என் மனம் கலங்கிப்போகிறதே!—பிறகு என் கட மையை நிறைவேற்றுமற்போவேனே!—நாகு! இதையெல் லாம் பேசி என் மனேதிடத்தைக் கலக்காதே—நீ சொல்ல

விரும்புவதையெல்லாம் சீக்கிரம் சொல்—சொல்—உன்னை வேண்டிக் கொள்ளுகிறேன்.

நா. இதோ சொல்லுகிறேன்—அந்த முகத்துடன் என்னைப் பாராதீர்கள். இந்த ஸ்திதியில் உமது முகத்தைப் பார்க்கும்பொழுது—நான் பேசுவதற்கும் என்நா எழவில்லையே! கொஞ்சம் சாந்தமாய்ப்பாருமே! கொஞ்சம் கருணையோடு பாருமே! அக் கொடிய பாபிக்கு இளகிய உமது மனம்—என் பொருட்டு—கொஞ்சம் இளகாதா?

[அங்கிருக்கும் ராம பட்டாபிஷேகப்படத்தைப் பார்த்து]

சீதாதேவி! சீதாதேவி! நான் படும் கஷ்டம் நீருப்பட்டிருக்கிறீர்! உமது கணவன் ராவண சம்ஹாரத்தின் பிறகு உம்மை—நிரபராதியாகிய உம்மை—வெறுத்த பொழுது—அப்பொழுது உமது மனம் என்ன நிலையிலிருந்ததென்று சற்று எண்ணி, என் பொருட்டு கொஞ்சம் மனமிரங்கி, உமது கணவனுடன் சொல்லி என் கணவனது மனதைச் சற்று இளகச் செய்யுமே! [அழுகிறாள்.]

தி. ராமா! நீ படைத்த பிராணி இது—அதைச் சிட்சிக்க எனக்கு என்ன சுதந்தரம் உண்டு? சிட்சிப்பதும், ரட்சிப்பதும் உனது பாரம்!—நாகு! உன் மீது எனக்குக்—கோபமில்லை— நான் சாந்தமாயிருக்கிறேன் ராமனருளால்—நீ எந்தத் தெய்வத்தைத்தினம் தொழுகிறாயோ—அந்தத் தெய்வத்தின் மீதாணைப்படி—இவ்விஷயத்தின் உண்மையைச் சொல் சீக்கிரம்.

நா. சொல்லுகிறேன்—உங்களை மணந்த நாள் முதல்—உங்களையே என் தெய்வமாக—பிரத்யட்ச தெய்வமாகப் பூசித்து வருகிறேன்! ஏதோ என் தாயார் கட்டளை யிட்டார்களே யென்று, துளசி மாடம் பூஜை செய்து வருகிறேன் வாஸ்தவம் தான். ஆயினும் திருவள்ளுவர் குறளில் "தெய்வந் தொழாள்" என்னும் குறளைப்படித்த நாள் முதலாக எனக்கு எல்லாத் தெய்வமும் நீங்களே என்று சத்தியமாக பாவித்து நடக்கிறேன். ஆகவே, இந்த ஒன்பது வருஷங்

ளாகக் காலையில் எழுந்தவுடன் வேறெந்த தெய்வத்தை யும் நினைப்பதன் முன், எந்த பாதங்களை எனக்கு எல்லாத் தெய்வமும் என்று எண்ணித் தொழுது வந்தேனோ, அந்த, உங்களுடைய இப்பாதங்களின் மீதாணைப்படி—உண்மை யைச் சொல்லுகிறேன்—நான் இப்பொழுது உமக்குச் சொல்லும் வார்த்தைகளில் அணுவளவும் பொய்யில்லை என்று உறுதியாய் நம்பும்.

தி. சொல்.

நா. நான்—இட்சணம் வரையில்—உங்களை, மனோவாக்கு காய மென்னும் திரிகரண சுத்தியாய்—என் ஆருயிர்க்காதலனாக வும், கணவனாகவும், தெய்வமாகவும் கொண்டு நடந்து வந் தேன். இனியும்—என் உயிர் உள்ளளவும் அவ்வாறே நடக் கப் போகிறேன்—நீர் என்னை வெறுத்துத் துரத்தியபோதி லும்!—அன்றியும் எந்தெந்த ஜென்மம் நேரிடினும் நீரே எனக்கு இப்படிப்பட்ட கணவனாக வாய்க்கவேண்டுமென் றும் பிரார்த்திக்கிறேன்—இதில் அணுவளவேனும் பொய் யிருக்குமாயின்—தங்கள் உத்தம புருஷர்களுக்குத் துரோ கம் செய்யும் பாபிகளாகிய ஸ்திரீகள் விழும் நரகத்தில் மீளாது சூர்ய சந்திரர்கள் உள்ளவரை விழக்கடவேன்!

[கண்ணீர் விட்டழுகிறாள்.]

தி. கண்ணே! கண்ணே! அழாதே!

[தலையைத் தடவிக்கொடுக்கிறார்.]

நா. இனியாவது—என் சொல்லை—நம்புகிறீரா?

தி. நம்புகிறேன்—நம்புகிறேன்!—நம்புகிறேன்!

[அவளது முகத்தைத் தூக்கிப் பார்க்கிறார்.]

நா. கண்ணு! உம்முடைய மனதார—உமக்கு நான் துரோகம் செய்வேன் என்று எப்படி எண்ணினீர்? உமக்கு மனம் வந்ததே!

தி. கண்ணே! கண்ணே! அப்படி என்னைப் பாராதே! எழுந் திரு. [கை கொடுத்து அவளைத் தூக்கி தன் மடிமீது இருத்தி, அவளை உற்றுப் பார்த்து—முத்தமிட்டு]

நான் அவ்வாறு எண்ணியது தவறு என்று ஒப்புக்கொள்ளு கிறேன்—அந்த—நோயாளி—யார் என்று மாத்திரம் சொல் லிவிடு.

நா. [திடீரென்று முகம்மாறி] அதையும் சொல்கிறேன் கேளும்—அவர்—என்னுடைய நெருங்கிய — பந்து—வாஸ்தவமாய் மிகவும் நோயாயிருக்கிறார்—அவர் பிழைப்பது கடினம் என்று வயித்தியர்கள் கைவிட்டனர்—என் தாயார் நோயா யிருக்கிறார்கள் என்று உம்மிடம் சொன்னது—பொய்—இந்த ஒரு பொய்யை மன்னியுங்கள்—

தி. அந்த நோயாளி—உன் நெருங்கிய பந்துவானால்—அதை என்னிட மிருந்து ஒளித்து வைப்பானேன்—அவர் பெயர் என்ன?

நா. ஐயோ! அதைத்தான் சொல்ல அசக்தளாயிருக்கிறேன்.

தி. ஏன்? [முகம்மாறி]

நா. ஐயோ! அதை ஒருவரிடமும் வெளியிடுவதில்லை யென்று பிரமாணம் செய்திருக்கிறேன்.

தி. என்னிடமிருந்து கூடவா?

நா. ஆம்.

தி. [அவளை மெல்ல தன் மடியினின்றும் இறக்கி] ஏன் அப்படிப் பிரமாணம் செய்தாய்?

நா. நான் என் செய்வேன்! என் செய்வேன்! உம்மீது ஆணை யிட்டு, நீர் என் கழுத்தில் நமது கலியாண காலத்தில் கட் டிய தாலியைப் பிடித்துக்கொண்டு பிரமாணம் செய்யும் படிச் செய்தார்!

தி. என்னிடம் இதைச் சொல்லாது—இரகசியமாய் வைத்திருக் கும்படி?

நா. ஆம்—ஆம்!

தி. அதற்கு—நீ—சம்மதித்தாய்?

நா. ஆம்! ஐயோ! பேதை நான் என் செய்வேன்! என் செய்வேன்!

தி. அப்படிபோய்—நாற்காலியில் உட்கார்!

[நாகரத்தினம் நடுநடுங்கி அப்படியே உட்காருகிறாள்.]

ராமா! ராமா! அந்தகார இருள் என் ஆன்மாவை மறுபடியும் சூழ்கிறதே! என் செய்வேன்? என் செய்வேன்?

நா. ஐயோ! இப்பொழுது எனக்குத் தெரிகிறது! அப்படி நான் பிரமாணம் செய்திருக்கக் கூடாது! அது உமக்கு துரோகமாகும்! ஆயினும் பிரமாணம் செய்து விட்டபிறகு இப்பொழுது நான் என் செய்வது? என் செய்வது?

தி. நான் ஒன்று சொல்கிறேன்—அதன்படி செய்

நா. சொல்லும்—என்னால் முடியுமானால் செய்கிறேன்.

தி. நான் கட்டிய தாலியைப் பற்றிக்கொண்டு தானே—பிரமாணம் செய்தாய்! அந்த தாலியை—என்னிடம் கழற்றிக் கொடுத்து விடு!

நா. ஹா!—ஹா!—ஹா!—

தி. பிறகு—அந்த பிரமாணத்தினின்றும்—விடுபட்டவளாவாய்!

நா. அந்தோ! எந்தஜன்மத்தில் நான் என்னபாபமிழைத்தேனே? என் கணவன் வாயினின்றும் இக் கர்ணகடூரமான வார்த்தைகளைக் கேட்கும்படி! கண்ணு! கண்ணு! உங்கள் வாயால் இவ் வார்த்தைகளை நீங்கள் கூறலாமா?

தி. உன் நடத்தையானது—அவ்வாறு கூறும்படி செய்தது என்னை! ராமன் என்னை மன்னிப்பானாக!—ஏன் தாமதம் செய்கிறாய்?

நா. எதற்கு?

தி. என் சொற்படி நடக்கிறேன் என்றாயே?

நா. ஐயோ!—என்னால் முடியுமானால் நடக்கிறேன் என்று சொன்னேன்! இது செய்ய என்னால் முடியாதே! முடியாதே!—நான் சொல்வதைக் கேளுங்கள்—இதை விட—என்னை உமது துப்பாக்கியால் சுட்டு விடுங்கள்—உடனே!

பிறகு நான் இறந்தவுடன்—எந்தக் கரத்தால்— என் கழுத்தில் கட்டினீரோ— அக் கரத்தால் நீரே கழற்றிக்கொள்ளும்—நமது குலாசாரப்படி ! [தேம்பி அழுகிருள்.]

தி. அந்த நோயாளி நிரம்ப புத்திசாலி ! நல்லயுக்தி சொல்லிக் கொடுத்திருக்கிருன் உனக்கு! இனிமேல் உனக்கு இது எதற்காக—அந்த நோயாளியை—வேறு ஒன்று உனக்குக் கட்டச் சொன்னுல்—செய்கிருன் !

நா. ஹா ! ஹா ! இந்த வார்த்தையைக்கேட்டு என் இருதயம் வெடித்து மாளாதிருக்கிறேனே ! ஐயோ ! இவ்வாறு பேசி என்னை யமவாதனையிற் படுத்துவதை விட, ஒரு க்ஷணத்தில் என்னைச் சுட்டுக் கொன்று விடுமே !

[பீரோவண்டைப் போகிருள்.]

தி. நில் அங்கேயே !—உன்னைக்கொல்ல எனக்கு என்ன சுதந்தரம் உண்டு ! அதை விட—நான் மடிந்து—உன்னை விடுவிக்கிறேன் ! [டம்ளரை எடுக்கப் போகிருர்.]

நா. ஐயோ ! ஐயோ ! வேண்டாம் ! வேண்டாம் !—

தி. தடுக்காதே ! என்னை ! [டம்ளர் அருகிற் செல்கிருர்.]

நா. ராம மூர்த்தி ! ராம மூர்த்தி! நான் திரிகரணமாய் கனவிலும் துரோகம் நினையாப்பத்தினியாளுல், நீர்தான் தடும்! நீர்தான் தடும் ! [அறையில் ஓடிக்கொண்டிருந்த மின்சார விசிறியில் இதழ் ஒன்று, அதன் வேகத்தினுல் கழன்று, அந்த டம்ளரின் மீது விழ, அது உடைந்து போகிறது.]

தி. என்ன ஆச்சரியம் !—ராமா இது உன் செயலா ?

[திகைத்து நிற்கிருர்.]

நா. ராம மூர்த்தி! ராம மூர்த்தி! என் மாங்கல்யத்தைக் காப்பாற்றினீர். [படத்திற்குப் பணிகிருள்]—கண்ணு, என் வார்த்தையை நீர் நம்பாவிட்டாலும்—நீர் பணிந்து வரும் ஸ்ரீராம மூர்த்தியின் செயலிலாவது நம்பிக்கை வைத்து—நான் ஒரு பாபமுமறியாதவள் என்று நிச்சயமாய் நம்பி—இத்துயரமெல்லாம் நீங்குமே !

தி. நீக்குகிறேன்—அவன் இன்னானென்று மாத்திரம் சொல்லி விடு.

நா. ஐயோ! மறுபடியும் அதையே கேட்கிறீரே! அதைத்தான் சொல்ல முடியாதென்றேனே! ஐயோ! உம்மை நான் நிரபராதி என்று நம்பும்படி செய்ய வேறுயார்க்கமும் எனக்குத் தோன்றவில்லை—இதைப்பற்றி இதுதான் என் கடைசி வார்த்தை! இதோ இப்படத்தில் நீர் வணங்கும் ஸ்ரீராமரும், நான் வணங்கும் சீதாதேவியுமிருக்கிறார்கள்! அவர்கள் பாதசாட்சியாய் பிரமாணம் செய்கிறேன்! என் தாயார் வீட்டிலிருக்கும்—இறக்கக் கிடக்கும்—அந்த நோயாளியை—நான் எப்பொழுதாவது—கனவிலும்—என் காதலனாக க்ஷணமேனும் எண்ணியிருந்தபோதிலும்—என் சொந்த—தகப்பனாரை—அவ்வாறு எண்ணிய கோரமான மஹாபாதகத்திற்குள்ளாவேன்! இதற்குமேல் சொல்ல எனக்கு வார்த்தைகள் இல்லை! [நாற்காலியில் வீழ்கிறாள்.]

தி. [திடுக்கிட்டு நின்று] ராமா! ராமா! என்னை இப்படியும் பரிசோதிக்கிறீரா?

நா. [எழுந்து அவரருகில் வந்து] இனியாவது—என்னை நம்பமாட்டீரா? இனியாவது என்னை நம்பமாட்டீரா? ஐயோ! நான் படும் யமவாதனை உமக்குத் தெரியவில்லையா? உன் கண்களில் ஒரு நீர்த்துளி வந்தாலும் நான் சகிக்கமாட்டேன், என்று கூறிய உமது வார்த்தைகள் எங்கே பறந்து போயது? போன மாதம் என்னைக் கடற்கரை யோரம் சந்திப்பதாகக் கூறி, உமக்கு வண்டியில்லாதபடியால், நீர் நேரம் சென்று வந்தால் வருத்தப்படப்போகிறேன் என்று எண்ணி, சொன்ன மணிப்பிரகாரம் வர, இரண்டு மைல் நடந்து வந்து என்னைக்கண்டீரே! அப்படிப்பட்ட உமது கனிந்த மனம்—இப்பொழுது ஏன் என் விஷயத்தில்—கருங்கல்லினும் கடினமானதாகி விட்டது! அப்படி நான் என்ன பிழை செய்தேன்! அதையாவது சொல்லுமே!

தி. சொல்கிறேன்! நீ சொல்ல வேண்டியதை யெல்லாம் சொல்லியாயிற்று. இனி நான் சொல்லவேண்டியதையெல்லாம்

சொல்கிறேன் — ஆத்திரப்படாமற் கேட்டு—பிறகு நீயே தீர்மானம் செய்—நான் உன் மீது சந்தேகங் கொண்டது சரியா—இல்லையா என்று. உட்கார்.

நா. நான் உமது—பாதத்தருகில்—உட்காருகிறேனே—

தி. வேண்டாம்—நாற்காலியில் உட்கார்—என் எதிராக.

[அங்ஙனமே செய்கிருள்.]

நான் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம், ஆம் இல்லை என்று சத்தியமாகப் பதில் சொல்லிக்கொண்டுவா.

நா. கேளும்.

தி. நேற்றிரவு—உன் தாயார் வீட்டிற்குப்போனபோது—நீ மெத்தைக்குப் போய் அந்த நோயாளியைப்பார்த்தபொழுது—நீ அவருக்கு முத்தமிட்டாயா ?

நா. இட்டேன் !

தி. ராமா ! ராமா !—ஹூம்—அவர் உனக்கு முத்தம் கொடுத்தாரா ?

நா. ஆமாம்—நெற்றியில்.

தி. ராமா !—உம்—அந்த அறையிலேயே—நீ படுத்துக்கொண்டாயா ?

நா. ஆம்—என் தாயாரும் என்னுடன் இருந்தார்கள்.

தி. அதை நான் கேட்கவில்லையே, நீயாக அதையேன் சொல்கிருய் ?

நா. ஏதோ—நான் சொல்லவேண்டுமென்று—என் புத்தியிற் பட்டது.

தி. சந்தோஷம்—அந்த வழியிலேயே போகிறேன்—கொஞ்ச நேரம்பொறுத்த பிறகு உன் தாயார்—வெளியில், வெராண்டாவிற்குப் போய் படுத்துக்கொண்டார்களா ?

நா. ஐயோ !—ஆமாம்.

தி. பிறகு—

நா. பிறகு என்ன ?

தி. ராமா! ராமா!—பிறகு கொஞ்சம் பொறுத்து—அந்த அறையின் கதவை நீ எழுந்திருந்து சாத்தினுயா இல்லையா?

நா. தேவி! தேவி!

தி. தேவியைக் கூப்பிடுவதிருக்கட்டும்! என் கேள்விக்கு பதில் சொல்.

நா. சாற்றினேன்! அந்த நோயாளி—அக் கதவின் வழியாகக் குளிர்ந்த காற்று வீசுகிறது, அதைத் தன்னுல் பொறுக்க முடியவில்லை—அக்கதவைச் சாத்து என்று கேட்டார்—அதற்காகச் சாத்தினேன்! இதில் அணுவளவும் பொய்யில்லை—உம்மீது ஆணைப்படிச் சொல்லுகிறேன்.

தி. என் மீதாணைப்படி!—அது தான் சரி!

நா. ஐயோ! என் வார்த்தையை நம்புமே! என் வார்த்தையை நம்புமே! பேதை பெண்பால்—எனக்கு அதற்குமேல் சொல்ல—ஒன்றும் தெரியவில்லையே!

[தேம்பி அழுகிருள்.]

தி. அழாதே!—கண்ணைத் துடைத்துக்கொள் — துடைத்துக் கொள். [தானுக அவள் முன்தானையை எடுத்துக் கண்களை துடைக்கிருர்.]

நாகரத்தினம்! உன் வார்த்தையை நம்புகிறேன்—இந்த கடைசிகேள்விக்கு மாத்திரம்—உண்மையான பதில் உரை.

நா. [கண்களில் நீர் ததும்ப] கேளுங்கள்!

தி. என் தாயார் ஒருவர் இருக்கிருர்கள்—அவர்கள் நோயாயில்லாத பொழுது—அவர்கள் மிகவும் நோயாயிருப்பதாக உன்னிடம் சொல்லி, ஒருவாரமாக தினம் இரவில் நான் அவர்கள் வீட்டிற்குப் போகிறேன்—போனதும் அந்த வீட்டில் மெத்தையின் பேரில்—ஒரு பெண் இருக்கிருள் அப் பெண்ணை நான் முத்த மிடுகிறேன்—அவளும் எனக்கு முத்தமிடுகிருள்—கொஞ்சம் நேரம் பொறுத்து என் தாயார் அவளிருக்கும் அறையை விட்டு வெளியே போகிருர்கள்—பிறகு—நான் அந்த அறையின் கதவைச் சாத்தி விடுகிறேன்—பிறகு—விளக்கை அவித்து விடுகிறேன்!—

நா. ஐயோ ! ஐயோ ! என்— [தன்னைத் தடுத்துக்கொண்டு] அவர் அதை தன் கண்கூசுகிறதென அவிக்கச் சொன்ளுரே !

தி. நியாயம் ! அவர் சொன்ளுர் என்பது எனக்கு தெரியாது—மிகவும் சந்தோஷம்—பிறகு அந்தப் பெண் அந்த அறையிலிருக்கும் விளக்கை அவிக்கும்படி எனக்குச் சொல்ல—நான் அவிக்கிறேன்—என்று வைத்துக்கொள்; இதை யெல்லாம் நீ என்னைக் கேட்க—நான் ஒப்புக் கொண்ட பிறகு—நான் உன்னிடம் "என் மீது ஒரு குற்றமுமில்லை. நான் நிரபராதி! உனக்கு துரோகம் கனவிலும் நினைத்தவனல்ல—என் வார்த்தையை நம்பு" என்று சொல்வேளுயின்—

[அவளது இருகரங்களையும் பற்றி அவளது முகத்தை எறெடுத்துப் பார்க்கச் செய்து]

என் வார்த்தையை—நீ நம்பியிருப்பாயா? சத்தியமாகச் சொல்—என் மீதாணைப்படி !

நா. [சற்று பொறுத்து] நம்பி—யிருக்கமாட்டேன் !

தி. [முகமலர்ந்து] உண்மையை உரைத்தாய்! ராமனருளால்—இந்த அற்ப சந்தோஷமாவது எனக்கு கிடைத்ததே! உம்! [பெருமூச்செறிந்து]

பெண்ணே! "நீர் கூறிளுல் நான் நம்பியிருக்கமாட்டேன்—ஆயினும் நான் கூறுவதை நீங்கள் நம்பவேண்டும்"—என்று—என்னை வாய் கூசாமல் கேட்கிருயா ?

நா. [தைரியமாக] ஆம்—கேட்கிறேன் !

தி. கேட்கிருய் !

நா. ஆம்.

தி. சத்தியமாக ?

நா. சத்தியமாக !

தி. [அவளது கரங்களை மெல்ல நழுக விட்டு, ஸ்ரீராமர் படத்தருகிற் போய் அங்கிருக்கும் மேஜையின் மீது சாய்கிருர்] ராமா! ராமா! சர்வஞன் நீ ஒருவனே! பேதை மனிதனுக்

கென்ன தெரியும்! [தலை நிமிர்ந்து] சீச்சீ! என்ன பித்தம் பிடித்திருந்தேன் இது வரையில்—ராமா! உலகத்தில் உத்தம பத்தினிகளின் கற்பினைக் காப்பது உனது பாரம்! அவர்கள் தவறி நடந்தால் அவர்களைத் தண்டிப்பது உன் கடன்! எனக்கேன் இந்தக் கவலை! ரட்சிப்பதற்கும் சிட்சிப்பதற்கும் நான் யார்? உன் திருவுளப்படிச் செய்!—அப்பா! என்னிருதயத்தினின்றும் பெரும் பாரம் நீங்கியது!—கண்ணே! வாயிப்படி ஒன்றும் அஞ்சாதே! சந்தோஷமாய்—அந்த நோயாளியைப் போய் பார்த்து விட்டுவா! நான் மனப்பூர்வமாய் உத்தரவளிக்கிறேன்.

நா. தேவி! தேவி! எல்லாம் உனதருள்! கண்ணே! உமது மனம் திரும்பியது எனது பாக்கியம்! அடியாள் நமஸ்கரிக்கிறேன்! [பாதத்தில் வீழ்ந்து நமஸ்கரித்து நிற்கிருள்.]

தி. ஏன்—தாமதம் செய்கிருய்? மிகவும் நேரமாய் விட்டது—போய்வா— சந்தோஷமாய்—

நா. வெள்ளிக்கிழமை—புஷ்பம்?

தி. ஆ! நன்ருய் ஞாபகப்படுத்தினுய்! இதோ பெற்றுக்கொள் [புஷ்பம் வைத்திருக்கும் தட்டினின்றும் ஒரு புஷ்பத்தை எடுத்து]

ராமா!—இவள் பதிவிரதையாளுல்—இவளுக்கு அருள் புரியும்! பதிதையாளுல்—அப்பொழுதும் அருள்புரிந்து—மன்னியும்! நான் வேண்டிக்கொள்கிறேன். போய் வா— [புஷ்பங்கள் வைத்திருந்த தட்டைப்பார்த்து]

பொறு! பொறு! இதேது இன்ஞெரு புஷ்பம்? கணக்காக வைத்திருந்தேனே! ராமா! இதுவும் உன் பரி சோதனையா? செய்! எப்படி வேண்டுமென்ருலும் பரிசோதித்துப்பார்! இனி அஞ்சேன்! கண்ணே இப்படிவா—உன் வீட்டின் மெத்தையின் மீதிருக்கும் நோயளி-யார் என்று அறிகிலேன்—அவர் யாராயினுமாகுக — எப்படிப்பட்ட பாதகனுயினுமாகுக! எனக்குப் பெரும் துரோக மிழைத்தவனுயினுமாகுக! அவர் என் ராமன் இவ்வுலகில் சிருஷ்டித்த ஜீவ கோடிகளுள் ஒருவர், ஆகவே அவரிடம் இதைக் கொண்டுபோய்க்

கொடுத்து—அவரது பாபங்களையெல்லாம் பரிஷ்கரித்து அவரது நோயினின்றும் அவரை நீக்கி—சிக்கிரம் தன் பாதாரவிந்தத்தில் சேர்த்துக்கொள்ளும்படியாக — என் ராமனை நான் மனப்பூர்வமாகப் பிரார்த்தித்தேன்—என்று சொல்—

[அப்புஷ்பத்தையும் அவள் கையில் கொடுக்கிறார்.]

நா. கண்ணே! உலகில் கிடைத்தற்கரிய உமது ஒப்பற்ற தயாளகுணத்திற்கு—அந்த ஸ்ரீராமர் தான் கைமாறு செய்ய வேண்டும்! நான் சொல்லக்கூடாத உண்மையை அவராக உமக்கு சிக்கிரம் தெரிவிப்பாராக!—எனக்கு உத்தரவு கொடுங்கள்.

தி. முன்பே—கொடுத்தேனே!

நா. அது போதாது—வழக்கப்படி—எனக்கு உத்தரவு கொடுங்கள். [தன் முகத்தை அவரது முகத்தருகில் கொண்டு போகிறாள்]

தி. உம்!—ராமா! எல்லாம் உமது செயல்—

[அவளை முத்தமிட்டு, அவளது கரத்தைப் பற்றி கதவண்டை வரையில் கொண்டு போய்விட, அவள் போகிறாள். திரும்பி வந்து]

என்ன ஆச்சரியம்! அந்த நோயாளி—நோய் நீங்கி—சுகமாய் வாழட்டும் என்று சொல்ல வந்தவன்—வேறு வார்த்தைகளை உபயோகித்தேனே? நான் வேண்டுமென்று சொல்லவில்லை—ஏன் அவ்வார்த்தைகள் என் வாயினின்றும் வந்தன? [வெளியில் மோட்டார் வண்டி போகிற சப்தம் கேட்கிறது—உடனே மோட்டார் சைகில் வருகிற சப்தம் கேட்கிறது.]

என்ன! என் ஆர்டர்லியின் மோட்டார் சைகில் ஹாரன் சப்தம் கேட்கிறது. யார் அங்கே?

[ஒரு கான்ஸ்டபில் கதவண்டை வந்து செல்யூட் செய்து நிற்கிறான்.]

என்ன சமாசாரம் 141?

கா. கமிஷனர் உங்களை கையுடன் அழைத்து வரச்சொன்னார்!

[ஒரு காகிதத்தை அவர் கையில் கொடுக்கிறான்]

தி. [அதைப் பிரித்து பார்த்து] என்ன சமாசாரம்? உனக்குத் தெரியுமா?

கா. எனக்கொன்றும் தெரியாது! உங்கள் ஷாபர் இந்நேரம் இருப்பாரோ இல்லையோ என்று சொல்லி, என்னை சைட் காரில் அனுப்பினர், உங்களை உடனே அழைத்துவர.

தி. இதோ டிரெஸ் பண்ணிக் கொண்டு வருகிறேன்!—

கா. அதெல்லாம் வேண்டாம்—அதற்கு நேரமாகும் — அப்படியே அழைத்து வா என்று சொல்லி யனுப்பினர்.

தி. அப்படியா! ஆனல் ஏதோ மிகவும் முக்கியமான விஷயமாக இருக்கும்—இதோ வந்தேன்.

[அங்கவஸ்திரத்தை எடுத்துக் கொண்டு புறப்படுகிருர்.]

காட்சி முடிகிறது.

## இரண்டாம் காட்சி.

இடம்.—ஆக்டிங் கமிஷனர் ஆப் போலீஸ் பரமானந்த நாயுடு வீட்டில் ஓர் அறை.

காலம்:—அதே இரவு.

பரமாநந்த நாயுடு சில கடிதங்களைப் பார்த்துக்கொண்டே உலாவுகிருர்.

ப. அடடா! இவ்விஷயம் கொஞ்ச நாளைக்கு முன்பாக எனக்குத் தெரிந்திருக்கலாகாதா? இப்பொழுது எனக்கு உடம்பு அசௌக்கியமாயிருக்கும்போது தெரியவேண்டுமா? ஆயினும் பெரிதல்ல—இதைக்கொண்டு அவளை வழிக்குக் கொண்டுவரலாம்—என் மனோரதத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம்—ஆயினும் அவளிடம் நேராக எப்படிக் கேட்பது?—அவள் மிகுந்த மானமுடையவள்—ஆயினும் பார்ப்போம். [நாற்காலியில் உட்காருகிருர்.]

டாக்டர் நாராயணன் வருகிருர்.

நா. [கதவண்டையிருந்து] நான் வரலாமோ?

ப. வாருங்கள் — டாக்டர் — உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். முன்பே வருவீர்கள் என்று நினைத்தேன்— நீர் பரீட்சை பார்த்ததில் என்ன சமாசாரம்?

நா. [நாற்காலியில் உட்கார்ந்து] அவ்வளவு திருப்திகரமாயில்லை.

ப. டாக்டர், என்னிடம் ஒன்றும் ஒளியாதீர்—என் சமாசாரம் தான் உங்களுக்குத் தெரியுமே—இதற்கெல்லாம் ஒன்றும் நான் பயப்படுபவனல்ல—எல்லோரும் ஒருநாள் சாக வேண்டியவர்கள் தானே—இருக்கிறவரைக்கும் சுகமனுபவித்துவிட்டு—கண்ணை மூடிக்கொள்ளவேண்டும்—அவ்வளவுதான்.

நா. ஆனாலும் இருக்கிறவரைக்கும், சவுக்கியமாயிருக்க வேண்டுமல்லவா?

ப. எல்லாம் பார்த்துக்கொள்வோம்—நீர் பரிட்சையில் என்ன கண்டீர் சொல்லும் உண்மையை ஒளியாது—பத்திரம்.

நா. வழக்கம்போல் சர்க்கரை யிருக்கிறது—கொஞ்சம் ஆல்பியூமன் (Albumen) இருக்கிறது, கொஞ்சம் ஆசிடோனும் (Acetone) இருக்கிறது—ஆகவே நீங்கள் கொஞ்சம் ஜாக்கிரதையாகத்தானிருக்கவேண்டும்.

ப. உம்! இதை மாற்ற உங்களிடம் மருந்து ஒன்று மில்லையா?

நா. இதோ ஒரு மிக்சர் (Mixture) கொண்டு வந்திருக்கிறேன், இதை மூன்று நாள் சாப்பிட்டுப்பாருங்கள்—ஒரு நாளைக்கு மூன்று முறை சாப்பிடவேண்டும். பிறகு மறுபடியும் நீரைப் பரீட்சைபார்த்து சொல்கிறேன். இதனால் இக்கெடுதிகளெல்லாம் குறையுமென்று நினைக்கிறேன்.

[ஒரு மருந்து புட்டியைக் கொடுக்கிறார்.]

ப. என்ன போங்களையா! நீங்களும் உங்கள் மருந்தும்! உங்கள் இங்கிலீஷ் வயித்தியத்தில் இந்த வியாதிகளுக்கெல்லாம் மருந்தே கிடையாது. இப்பொழுதே சொன்னேன், இந்த மூன்று நாட்களுக்குள் சரியாகா விட்டால், நான் யுனானி வயித்தியம் தான் பார்க்கப்போகிறேன்—என்ன கசப்பான

மருந்துகள் கொடுக்கிறீர்கள் நீங்கள். அவர்கள் மருந்துகள் எல்லாம் என்ன தித்திப்பாயிருக்கிறது' பாருங்கள்.

நா. வருகிறேன் — ஒரு சமாசாரம்—அதைக் கூறுவதற்காக என்னை மன்னிக்கவேண்டும்—உங்களுக்கு ரத்தப் பிரெஷர் (Pressure) அதிகமாயிருக்கிறது. கொஞ்சகாலம் வரையில் ஸ்திரீ விஷயத்தில் நீங்கள் அதிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்.

ப. டாக்டர்! நீங்கள் வேறென்ன வேண்டுமென்றாலும் சொல்லுங்கள் கேட்கிறேன், இந்த விஷயத்தில் மாத்திரம் என்னைக் கட்டுப் படுத்தாதீர்கள்.

நா. பிறகு—உங்களிஷ்டம்.

ப. என்ன டாக்டர்? அப்படி ஏதாவது மிகவும் கெடுதியாயிருக்கிறதாயென்ன?

நா. மிகவும் கெடுதி யென்று சொல்வதற்கில்லை—ஆயினும் திடீரென்று ரத்தக் குழாய்களுக்கு ஏதாவது கெடுதி நேரிட்டால்—கஷ்டம்—

ப. சரி—அப்படிப்போக வேண்டுமென்றிருந்தால் போகிறது—இதற்காக அந்த சுகத்தை விடுவதா? அதில்லாமலிருப்பதை விட பிணமாயிருப்பது மேலாகும்.

நா. அப்பொழுது—நான் வருவதா?

ப. வாருங்கள்.

நா. உம்—அந்த வைன் (Wine) சாப்பிடுவதை நிறுத்தி யிருக்கிறீர்களோ இல்லையோ?

ப. அதெல்லாம் முன்புபோல் அதிகமாகச் சாப்பிடுவதில்லை—எப்பொழுதாவது கொஞ்சம்—

நா. உம்—உடம்பு சுவஸ்தமாகும் வரையில் முற்றிலும் அதை விட்டிருந்தால் நலம். நான் சொல்லவேண்டியதைச் சொல்லி விட்டேன்.

ப. சரிதான் டாக்டர்—நீங்கள் எப்பொழுது பார்த்தாலும் பய முறுத்துகிறவர்கள். இந்த மருந்தை சரியாகச் சாப்பிடு கிறேன்— வாருங்கள்.

நீ. வருகிறேன். [போகிறார்.]

ப. இந்த வயித்தியர்களெல்லாம் எப்பொழுது பார்த்தாலும் இப்படித்தான்—பெரிய காபுராக்காரர்கள்! எனக்கு ஒரு யுக்தி தோன்றுகிறது—அவள் புருஷனைக்கொண்டே அவள் தகப்பனரை அரெஸ்டு செய்யச் செய்கிறேன்—ஓ! புரொக் லேய்ம் (Proclaim) செய்யப்பட்ட கைதியை தன் வீட்டில் மறைத்து வைத்திருந்ததற்காக அவனையே அரெஸ்டு செய் தாலோ! ஆம்! ஆம்! அதுதான் வழி—அவனையும் அரெஸ்டு செய்து லாக்கப் (lockup) இல் போட்டு பிறகு பார்த்துக் கொள்வோம்—வழிக்கு வருகிறானோ இல்லையோ வென்று!

ஓர் ஆர்டர்லி வருகிறான்.

ஆ. முதலியார் வந்திருக்கிறார்.

ப. வரச்சொல்— [ஆர்டர்லி போகிறான்.]

திருஞான முதலியார் வருகிறார்.

வா, திருஞானம்—உட்கார்.

தி. ஏதோ அவசரமாக அழைத்தீர்களாமே—என் உடுப்புடன் வராததற்காக மன்னிக்கவேண்டும்—கையுடன் அழைத்து வரச் சொன்னார் என்று ஆர்டர்லி வந்து சொல்லவே அப்ப டியே வீட்டிலிருந்த உடையுடன் வந்து விட்டேன்.

ப. அதுதான் சரி! இரகசியமாகவும், அவசரமாகவும் ஒருவனை அரெஸ்டு செய்ய வேண்டியிருக்கிறது. கவர்ன்மெண்டார் இதை தக்க மனிதனைக்கொண்டு நிறைவேற்ற வேண்டு மென்று உத்திரவு செய்திருக்கிறார்கள். நீ தான் இதைச் செய்யத்தக்கவன் என்று எண்ணி உன்னை விரைவில் அழைத்தேன்.

தி. சந்தோஷம்—என்னிடம் அவ்வளவு நம்பிக்கை வைத்திருப் பதற்காக நான் உங்களுக்கு வந்தனம் அளிக்கின்றேன்.

ப. ஆயினும்—இதில் ஒரு கஷ்ட மிருக்கிறது.

தி. என்ன கஷ்டமானாலும்—என்ன ஆபத்து வருவதானாலும்—என் கடமையை நான் செய்வேன் என்று தாங்கள் உறுதியாய் நம்பலாம்.

ப. அந்த நம்பிக்கை யிருப்பதினால் தான்—உன்னை வரவழைத்தது—உம்—சுமார் பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பாக கலெக்டர் சீதாபதி நாயுடுவை சுட்டுக் கொன்றனை ஒருவன் ஞாபகமிருக்கிறதா ?

தி. ஆம்—நன்றாய் ஞாபக மிருக்கிறது.

ப. அக் கைதியைக் கண்டு பிடிப்பவர்களுக்கு 500 ரூபாய் இனம் கொடுப்பதாக கவர்ன்மெண்டார் அக்காலம் பிரசுரம் செய்திருந்தார்களே, ஞாபகமிருக்கிறதா ?

தி. ஆம்.

ப. அக் கொலையாளியைக் கண்டு பிடிப்பதற்காக, நீ ஸ்பெஷல்டியூடியில் மூன்று வருஷம் சென்னை ராஜதானி முழுவதும் சுற்றியும் கண்டுபிடிக்க முடியாமற் போயிற்றல்லவா ?

தி. வாஸ்தவம்.

ப. அச்சமயம்—உன்—சொந்த மாமனார் தான்—அதைச் செய்திருக்கவேண்டுமென்று சந்தேகித்தாயல்லவா ?

தி. எனக்கு சந்தேக மில்லை—அவர் தான் செய்திருக்க வேண்டுமென்று உறுதியாய் நம்புகிறேன்—இப்பொழுதும். அவர் மாத்திரம் உடனே இறந்திரா விட்டால் எப்படியும் அவரைக் கைதியாய்ப் பிடித்து—அவர் தான் அக்குற்றம் செய்தவர் என்று ரூபித்திருப்பேன். அதற்குப் போதுமான ருஜுக்களை யெல்லாம் உங்களுக்கு அச்சமயம் எழுதி அனுப்பினேனே—

ப. உன் மாமனார்—இது நடந்ததும்—மைசூரில்—ஏதோ பிளேக்கில் இறந்ததாகவல்லவோ வதந்தி ?

தி. ஆம்—அப்பொழுதே உங்களுக்குத் தெரிவித்தபடி—அதை நான் நம்பவில்லை. அவர் தற்கொலை புரிந்தனர் என்று நினைக்கிறேன்.

ப. அவர்—தற்கொலை புரிய வில்லை—உயிருடன் இருக்கிறார்—என் பந்துவைக்கொன்ற அப்பாதகன்! அவனைத் தப்பி வைக்கும்படி அவன் இறந்ததாகப் பொய் வதந்தியை கற்பித்தனர்.

தி. அப்படியா! சந்தோஷம்! எங்கிருக்கிறார் அவர் சொல்லுங்கள்—என் சொந்த மாமனுயிருந்த போதிலும்—க்ஷணமும் தாமதியாது அரெஸ்டு செய்கிறேன்.

ப. உம்!—நீ செய்வாயென்பதற்குச் சந்தேகமில்லை—ஆயினும் நான் யோசிப்பதெல்லாம்—அவர் உன்னுடைய சொந்த மாமனாராயிற்றே—உன் அழகிய மனைவியின் தகப்பனாராயிற்றே—என்று யோசிக்கிறேன்.

தி. இருந்தால் என்ன? என் மனைவியின் தகப்பனுயிருந்தால் என்ன? இன்னும் பதின்மடங்கு நெருங்கிய பந்துவாயிருந்தாலும் என் கடமையைக் கொஞ்சமும் மனம் கோணாது செய்து முடிப்பேன்—அந்த மனோதிடத்தை என் ராமன் எனக்குக் கொடுத்திருக்கிறான். கிருஷ்ணாவதாரத்தில் பகவத் கீதையில் அவர் கூறியபடி அவரவர்கள் அவரவர்களுடைய கடமையை மனம் கோணாது செய்துத்தான் தீரவேண்டும். அதுவே நமது சனாதனதர்மம்—அவர் இப்பொழுது எங்கிருக்கிறார் சொல்லும்—உடனே புறப்பட்டுப் போய் அரெஸ்டு செய்து வருகிறேன்.

ப. கொஞ்சம் பொறு—அவசரப்படாதே—நான் யோசிப்பதெல்லாம் இது ஒன்று தான்—கொலை நடந்து 12 வருடங்களுக்குமேல் ஆய்விட்டது—இந்த காகிதங்களைப்பார்—

[அவனிடம் சில காகிதங்களைக் கொடுத்து]

—இந்த இரகசியம் நம்மிருவருக்கும் தான் தெரியும்—உன் மாமனாருக்கும் வயதாகி விட்டது. இப்பொழுது க்ஷயரோகத்தில் கஷ்டப்படுகிறாராம்—இன்னும் அதிக நாட்கள் இருப்

பது கடினமாம்—அப்படி யிருக்கும் பொழுது, இதை மறு படியும் கிளறி அவரை அரெஸ்டு செய்தால்—இன்னும் சில மாசங்களிருப்பவர், உடனே உயிர் துறந்தாலும் துறப்பார்—அன்றியும் உனக்கும் இது அவமானத்தை கொண்டு வரும்—மேலும் உன் அழகிய மனைவியும்—மிகவும் துக்கப் படுவாள். இதை இப்படியே அடக்கிவிட ஒரு வழி இருக் கிறது. நீ மனம் வைத்தால்—அது முடியும்.

தி. அடக்கிவிட வழியாவது? நான் மனம் வைப்பதாவது? நீங் கள் சொல்வது எனக்கு ஒன்றும் தெரியவில்லை.

ப. என் சமாசாரம் தான் உனக்குத் தெரியுமே—நீ இசைந்தால்—இதையெல்லாம் அப்படியே, ஒன்றும் வெளியாகாதபடி—அடக்கி விடலாம்.

தி. நாயுடு காரு—என்னை மன்னிக்கவேண்டும்—நீங்கள் சொல் வது எனக்கு அர்த்தமாக வில்லை.

ப. கொஞ்சம்—யோசித்துப்பார்—அர்த்தமாகும்.

தி. ஊம்! என்னை மன்னிக்கவேண்டும்—ஏதாவது லஞ்சம் கொடுக்கச் சொல்லுகிறீர்களா?

ப. சீச்சீ! அதை நீ கொடுக்கவும் மாட்டாய்—நான் வாங்கவும் மாட்டேன்.

தி. வேறு எந்தவழி? எனக்குத் தெரியவில்லை.

ப. சரி—உன் இஷ்டம்—உன் புத்தி இன்று கொஞ்சம் மழுங்கி யிருக்கிறது உம்—பிறகு உன் இஷ்டம்—நான் சொல்ல வேண்டியதைச் சொல்லியாயிற்று. ஆகவே—நீ உடனே—இப்பொழுதே—புறப்பட்டுப் போய், அந்தக் கைதியை அரெஸ்டு செய்—இதோ அக்கைதியிருக்கு மிடம் இக்கா கிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது—பார்த்துக்கொள்—இதையே எடுத்துச் செல்.

தி. [அக்காகிதத்தைப் பார்த்து] என்ன!—அடிபட்ட பிள்ளையார் கோயில் தெரு 12 நெம்பர் வீடா! ஓ! இப்பொழுது எல் லாம் தெரிகிறது! ஹா! என்ன தப்பிதம் செய்தேன்!

என்ன தப்பிதம் செய்தேன்! ராமா! ராமா! உன்னுடைய கருணை! உன்னுடைய கருணை! என் மனதிலிருந்த பெரும் பாரத்தை தொலைத்தனை! அடியுடன் தொலைத்தனை! ஐயோ! வீணாக அவள் மீது என்ன தவறான சந்தேகங் கொண்டேன்!

ப. என்ன திருஞானம்! நீ கூறுவது ஒன்றும் அர்த்தமாக வில்லை—ஏதோ மிகவும் சந்தோஷப்படுகிறாய்? என்ன சமா சாரம்?

தி. நாயுடுகாரு! இந்த சந்தோஷ சமாசாரத்தை உங்களிடம் தான் சொல்லக் கடமை பட்டிருக்கிறேன். நீங்கள் இத் தனை வருடங்களாக என் சொந்த தகப்பனாரைப்போல் என் மீது பிரீதி வைத்து என்னை முன்னுக்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஆகவே நான் இதை உங்களிடம் ஒளிக்க வேண்டியதில்லை. நான் உண்மையில் என் மாமனார் பல வருஷங்களுக்கு முன் இறந்ததாகவே இதுவரையில் எண் ணியிருந்தேன். சில தினங்களாக என் மனைவி இக்காகிதத் தில் குறிப்பிட்டிருக்கும் அடிபட்ட பிள்ளையார் கோயில் வீதி வீட்டிற்கு தன் தாயாரைக்காண வேண்டுமென்று போய்க்கொண்டிருந்தாள்—நான் ஏதோ சந்தேகப்பட்டு நேற்றிரவு அவ்வீட்டிற் பக்கத்து வீட்டுக்குள் நுழைந்து இதைகவனிக்க அங்கு ஓர் ஆடவனிருப்பதாகக் கண்டு— என் மனைவியை நான் கற்புடையவள் அல்ல—என்று நினைத் தேன்—அங்கிருக்கும் நோயாளி அவளுடைய தந்தை யென்று இதனால் ஸ்பஷ்டமாய் ருஜுவானபடியால் என் மனைவி கற்புடைய உத்தம பத்தினி என்பதை அறிந்தவ னாய், எனக்கு அடங்காச் சந்தோஷ முண்டாயிற்று. ஸ்ரீராமன் என் மனதிலிருந்த பெரும்பாரத்தை அகற்றினார்.

ப. உம்—அது சரிதான். என்னவென்றாலும்—நான் ஒன்று சொல்லுகிறேன்கேள்—இந்த ஸ்திரீகளை மாத்திரம் நம் பாதே!

தி. எல்லா ஸ்திரீகளையும் நீங்கள் ஒன்றாய் மதித்து விடலா காது.

ப. உன் இஷ்டம்—அதிருக்கட்டும்—இப்பொழுது உன் மாமனாரை நீ கைதியாக்கி தண்டனைக் குட்படுத்தினால்—உன்—மனைவிக்கு வருத்த முண்டாகாதா?

தி. உண்டாகும்—அதைப்பற்றி நான் அதிக கவலைப்படவில்லை, என் கடமையை நான் செய்து தான் தீரவேண்டும். அதனாலுண்டாகும் பலனைப் பற்றி நான் கருத வேண்டியதில்லை.

ப. சரி—அது உன்பாடு—நீ சீக்கிரம் புறப்பட்டுப்போய் உன் வேலையைப்பார்.

தி. இதோ புறப்படுகிறேன். [புறப்படுகிறார்.]

ப. ஆ!—திருஞானம்—இப்படிவா!—அடடா!—இதை மறந்தேன்—இது ஒரு பெரிய சங்கடமிருக்கிறதே!

தி. என்ன அது நாயுடுகாரு?

ப. உம்!—இந்தக் கைதியை இத்தனை நாள் அந்த வீட்டில் மறைத்துவைத்திருந்ததற்காக, உன் மனைவியையும், மாமியாரையும் கூட அரெஸ்டு பண்ணவேண்டியிருக்கிறதே!

தி. ராமா! ராமா!—ஆம்—அப்படித்தான் செய்யவேண்டும்.

ப. சீ! உனக்கென்ன கஷ்டங்களெல்லாம் நேரிடுகின்றன! இதனின்றும் தப்புவதற்கு ஒரு மார்க்கமும் உனக்கு தோன்றவில்லையா?—இப்பொழுது—என்ன செய்யப் போகிறாய்?

தி. என் கடமையை நிறைவேற்றப்போகிறேன்—ஸ்ரீராமன் பாரம்! எனக்கேன்?

ப. நீ இவ்வாறு பிடிவாதம் பிடிப்பதில் என்ன பயன்? நீ கொஞ்சம் யோசித்துப்பார்த்தால் தோன்றும்—நீ அதை யோசித்துப் பார்க்கமாட்டேன் என்கிறாய்.

தி. நாயுடுகாரு! வாஸ்தவமாய்—நீங்கள் சொல்வது எனக்கு ஒன்றும் புலப்படவில்லை.

ப. உனக்குப் புலப்படாவிட்டால்—உன் மனைவியைக்கேட்டுப் பார்—அவள் சொல்லுவாள்—நீ சீக்கிரம் புறப்படு—நீங்கள் இவ்வளவு கஷ்டப்படவேண்டி வந்ததே என்று உங்கள் மீது இரக்கங்கொண்டு—இதை நான் சொன்னேன்—அப்

புறம் உங்கள் நலேவிதியின்படி—அல்லது உங்கள் ராமன் விதிப்படியாகிறது.

தி. ஆம்! என் ராமன் விதிப்படிதான் எதுவும் நடக்கும்.

ப. ஆனல்—நீ புறப்பட்டுப்போய் உன் வேலையைச் செய்.

தி. ராமா!—நாயுடுகாரு—நான் விடை பெற்றுக் கொள்ளுகிறேன். [வணங்கிவிட்டுப் புறப்படுகிருர்.]

ப. நான் சொன்னதின் அர்த்தம்—வாஸ்தவத்தில் இவனுக்குத் தெரியவில்லேயா? அல்லது ஏதாவது தெரியாதவன்போல் பாசாங்கு செய்கிருனு?—சரி, இப்பொழுது நாம் இதைப் பற்றி கவனிக்கவேண்டியதில்லே. அவள் நம்முடைய கையில் சிக்கி விட்டாள்—இனி எப்படி தப்புகிருளோ பார்ப்போம். இவள் பத்தினித்தனத்தை நான் அறிகிறேன்—யாரங்கே ஆர்டர்லி கேசவா?

ஆர்டர்லி கேசவன் வருகிருன்.

கேசவா! ஸ்டேஷன் லாக்அப் நைட்டியூடி யாருடையதுடா?

கே. மாணிக்கம் பிள்ளே யுடையது.

ப. சந்தோஷம், அவனிடம் நான் சொன்னதாகச் சொல்லி, இன்றைக்கு திருஞான முதலியார் அரெஸ்ட் பண்ணிக் கொண்டு வரும் இரண்டு கைதிகளில், கிழவியை ஆர்டினெரி லாக்கப்பில் போடச்சொல் — மற்றொருத்தியை ஸ்பெஷல்லாக்கப்பில் போடச்சொல்—அர்த்தமாச்சுதா?

கே. ஆச்சுதுங்க—அந்தம்மா—திருஞான முதலியார் பெண்சாதியையா—சொல்ரைங்க?

ப. ஆமாம்—அது உனக்கு எப்படித் தெரிந்ததடா?

கே. இல்லே—திருஞான முதலியார் போகும் பொழுது என்னே அழைத்து—நான் இன்றைக்கு என் பெண்சாதியையும், மாமியாரையும் அரெஸ்டு செய்து கொண்டுவர வேண்டியிருக்கிறது—அவர்களே — லாக்கப்பில்— ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள் என்று சொல்லிவிட்டுப் போனர்.

ப. உம்!—ஆனால் நான் சொல்வதைக்கேள்—அவனிருக்கும் போது அவர்களிருவரையும் ஆர்டினெரி பொம்மனாட்டிகள் லாக்கப்பில் தான் போட்டுவை. அவன் போன பிறகு அவர்களிடமிருந்து ஸ்டேட்மெண்டு தனித்தனியாக வாங்கவேண்டுமென்று சொல்லி, கிழவியை அங்கேயே விட்டு விட்டு, மற்றவளை ஸ்பெஷல் லாக்கப்புக்கு அழைத்துக்கொண்டுபோய் விடு—தெரியுமா?

கே. நாயுடுகாரு— உங்கள் காலை பிடித்து வேண்டுகிறேன். இது வாணாங்கள். பாபம்! அந்தம்மா ரொம்ப தர்மபத்தினி— உங்களுக்கு யார்வேண்டுமென்றாலும் கிடைக்கிறார்கள்— அவர்களை மாத்திரம் தீண்டாதீர்கள்.

ப. கழுதை! விடுகாலை! யாரடா அவர்களைத் தீண்டுவதாகச் சொன்னது? அவர்களிடமிருந்து தனித்தனி ஸ்டேட்மெண்ட் வாங்க வேண்டியிருக்கிறது—இது ஒரு முக்கியமான கேசு. ஆகவே நானே ஸ்பெஷல் ரிபோர்ட் அனுப்ப வேண்டியிருக்கிறது. வேறொன்றுமில்லை—உன் வேலையைப்பார்! ஏதாவது மூச்சு கீச்சு விட்டாயா? நீயும் உங்கள் ஸ்டேஷன் அவுஸ் ஆபீசரும் போனமாசம் லஞ்சம் வாங்கினதை இழுத்துவிட்டு, உங்களிருவரையும் டிஸ்மிஸ் பண்ணி வைப்பேன்!—பத்திரம்.

கே. இல்லைங்க! இல்லைங்க! அப்படியே ஆகட்டும்.

ப. நான் சொன்னது ஞாபகமிருக்கட்டும்! நான் வருகிறேன். [போகிறார்.]

கே. இந்தப்பாவி—மனசிலிருப்பது எனக்கு நன்னா தெரியும் —அந்தம்மா — நல்ல பதிவிரதை—அவுங்க வீட்டிலே என்னபிரயோஜனம் வந்தாலும் எனக்கு சாப்பாடு போடாமலிருக்கிறதில்லே—அவுங்க ஊட்டு சாப்பாட்டே திண்ணுட்டு அவர்களுக்கு துரோகம் செய்யமாட்டேன்—ஏப்படியாவது அவர்களைக் காப்பாத்தரேன். [போகிறான்.]

காட்சி முடிகிறது

## மூன்றும் காட்சி.

இடம்:—அடிபட்ட பிள்ளையார் கோவில் வீதியில் ஒரு வீடு.

காலம்:—இரவு.

சுந்தரராஜ முதலியார் படுக்கையில் மிகவும் காயலாய்ப் படுத்துக்கொண்டிருக்கிறார். நாய்ச்சியார் அம்மாள் படுக்கை யருகில் நின்று கொண்டிருக்கிறாள்.

சு. நாகு—வந்தாளா? [மெத்தையின் மீது புறளுகிறார்.]

நா. இதோ—வருகிற சமயமாயிற்று—நீங்கள்—கொஞ்சம் தூங்குங்கள்.

சு. இனி—நான்—ஒரே தூக்கம்தான் — தூங்கவேண்டும்— என்ன மணியாயிற்று?

நா. எட்டரையாயிற்று.

சு. எட்டுமணிக்கெல்லாம் வருகிறேன் என்றாளே? அவள் சொன்னபடி வந்துவிடுவாளே?

நா. புருஷன் வீட்டில் என்ன வேலையோ? அதுவும் இன்றைக்கு வெள்ளிக்கிழமையாயிற்றே.

சு. நாராயணா! அவள் வருமளவும்—நான் பிழைத்திருக்கும்படி செய்யும்!—அந்த ஜன்னலைத்திற—காற்றில்லாமலிருக்கிறது —மூச்சு விடுவது கஷ்டமாயிருக்கிறது.

நா. ஐயோ! வேண்டாம்—ஜன்னலைத்திறந்தால்—நிலவு வெளிச்சத்தில் நீங்கள் இங்கு படுத்திருப்பது அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கெல்லாம் நன்றாய்த் தெரியுமே!

சு. இனி தெரிந்தாலும்—பெரிதல்ல—நான் சொன்னபடிகேள்.

நா. பிறகு—உங்களிஷ்டம்—இந்தப் பிடிவாதம் தானே—உங்களை இந்த கதிக்குக் கொண்டு வந்து விட்டது!

சு. வாஸ்தவம்—நீ திற.

[கிழக்கிலிருக்கும் ஜன்னலைத் திறக்கிறாள் மெல்ல]

என்ன அழகாய்ச் சந்திரன் பிரகாசிக்கிறது. இன்றைக்கென்ன பௌர்ணமியா?

நா. ஆம், சித்திராபௌர்ணமி.

சு. ஓ!—சரிதான்—அந்த ஜோஸ்யர் சொன்னது சரிதான்—இன்றுடன் என் ஆயுள் முடிந்தது!

நா. ஐயோ! அப்படிச்சொல்லாதீர்கள். [தேம்பி அழுகிருள்.]

சு. அழாதே! என்ன புத்தியில்லாதவளாயிருக்கிருய்! என் வீட்டில் என் பெண்சாதி பெண் அருகில் நான் இறப்பது மேலா, அல்லது—ஜெயிலில் தூக்கிடப்பட்டு இறப்பது மேலா?—நான் செய்த குற்றத்திற்கு நாராயணன் என் மீது கருணையே பாராட்டுகிருர்—போ துக்கத்தை அடக்கிக்கொண்டு—நாகு வந்தாளா பார்—இல்லாவிட்டால் ஒரு வேலைக்காரியையாவது அனுப்பி—

நா. இதோ வந்து விட்டாள்!—

நாகரத்தினம் வருகிருள்.

சு. கண்ணு—வா—ஏன் இத்தனை நேரம்—இன்றைக்கு?

நா. என்னை மன்னியுங்கள் அப்பா—நான் வீட்டை விட்டுப் புறப்படுவதற்கே கொஞ்சம் நேரமாயது—அப்புறம்-நேற்று வயித்தியர் ஒரு புதிய மருந்து சொன்னுரே அதை வாங்கிக்கொண்டு வர நேரமாச்சுது.

சு. சரிதான்—என்ன தூரமாக நிற்கிருய்?—என்ன உன்முகத்தைப்பார்த்தால் உன் மனதில் ஏதோ இருக்கிறுற் போலிருக்கிறது?

நா. ஒன்றும்—விசேஷமில்லை அப்பா.

சு இல்லை ஏதோ இருக்கிறது—இல்லாவிட்டால்—வழக்கப்படி வந்ததும்—எனக்கொரு முத்தம்—கொடுப்பாயே—இன்றேன் கொடுக்கவில்லை?

நா. அப்பா, உம்மை நான் ஒன்று வேண்டிக் கொள்ளுகிறேன்—இதற்குக்காரணம் என்னைக் கேளாதீர்? இதோ இந்த மருந்தைப் புசியும். [மருந்தை கோப்பையில் வார்க்கிருள்.]

சு. உம்!—அக்காரணத்தைச் சொன்னுலொழிய—நான் அந்த மருந்தைச் சாப்பிடேன்.

நா. அப்பா, நான் உம்மை மிகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்— இதில் மாத்திரம் பிடிவாதம் பிடிக்காதிர்—வைத்தியர் இதைக் கட்டாயம் சாப்பிட வேண்டுமென்றாரே.

[அதை அவரிடம் கொண்டு போகிறாள்.]

சு. ஒரு காரணம்—என் மனதிற்படுகிறது—அதுவாகத்தான் இருக்கவேண்டும்.

நா. அப்பா—இதைப்பற்றி மாத்திரம் என்னைக் கேட்கவேண்டாமென்றேனே.

சு. இல்லை—நான் உன்னைக் கேட்கவில்லை—நானாகச் சொல்கிறேன். அது சரியா அல்லவா என்று சொல்—உன் புருஷன்—உன் மீது—ஏதாவது சந்தேகிக்கிறாரா?—என்ன சும்மா இருக்கிறாய்?

நா. ஆம்.

சு. என்னைப்பற்றி!

நா. ஆம்—உங்களை இன்னாரென்று—அவருக்குத் தெரியாதே!

சு. நாராயணா!—நாராயணா! வேண்டும் வேண்டும்! நான் செய்த குற்றத்திற்கு இத்தண்டனையும் வேண்டும்!—இன்னும் அதிகமும் வேண்டும். நாகு!—என் அருகில்வா— இப்படி உட்கார் ஒரு நாற்காலியில்—ஒன்றும் பயப்படாதே—எனக்கு நீ முத்தம் கொடுக்க வேண்டாம்-என்னை உன் கரத்தால் தீண்டவும் வேண்டாம்—நடந்த உண்மையைச்சொல்.

நா. முன்பு இம் மருந்தைப் புசியும் அப்புறம் சொல்கிறேன்.

சு. முன்பு சொல்—அப்புறம் புசிக்கிறேன்.

நா. ஐயோ—முன்பு சாப்பிடுங்கள்—பிறகு சாவகாசமாய்ச் சொல்கிறேன்.

சு. அது உதவாது—என் நிலைமை—உனக்குத் தெரியாது—உன் புருஷன் மீதாணை—நடந்த உண்மையைச் சொல்.

நா. சரி—இனி நான் என்ன செய்வது? நான் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன்—இந்த வீட்டில் நோயா யிருப்பது என்

தாயாரல்ல என்பதை எப்படியோ கண்டு பிடித்து விட்டார்- இங்கு நோயா யிருப்பது ஒரு ஆடவன் என்று மாத்திரம் தெரிந்துகொண்டிருக்கிறார்—ஆயினும் நோயாயிருப்பது நீங்கள்—என் தகப்பனார்—என்பதை அறிந்திலர்—நீங்கள் பல வருடங்களுக்கு முன்பாக இறந்து போனதாகத்தான் இன்னும் எண்ணுகிறார் என்று நினைக்கிறேன்—ஆகவே நான் ஏதோ கெட்ட எண்ணத்துடன் இரவுகளில் இங்குவந்து—இங்குவந்து—ஒரு ஆடவனைப் பார்ப்பதாக எண்ணுகிறார்—அவருக்கு எப்படித் தெரிந்ததோ எனக்குத் தெரியாது—நான் உமக்கு முத்தமிடுவதைப் பற்றி கேட்டார்—நேற்றிரவு தாயார் அறையை விட்டு வெளியிற் போய்ப் படுத்துக் கொண்டதையும்—காற்றடிக்கிறதென்று நீங்கள் கதவைச் சாற்றச்சொன்னீர்களே—அதையும் எவ்வாறோ அறிந்து—என்னைக் கேட்டார்! [தேம்பி அழுகிறாள்.]

சு. நாராயணா!—நாராயணா! நான் செய்த பாபத்திற்காக என்னை தண்டியும்—என் அருமைக் குழந்தையை தண்டியாதீர்! ஐயோ! அவள் ஒரு பாபமுமறியாளே—என் உயிரை வாங்கிக் கொள்ளும்—என் குழந்தையை வருத்தாதீர்—நாகு! இதற்கெல்லாம் நீ என்ன பதில் சொன்னாய்?

நா. இங்கு நோயா யிருப்பது ஒரு ஆடவன்தான்—ஆயினும் நான் நீங்கள் சந்தேகிக்கிறபடி—ஒரு பாபமும் கனவிலும் நினைத்தவள் அல்ல என்று பிரமாணம் செய்தேன்.

சு. அதை நம்பினாரா?

நா. நான் உன் வார்த்தையை நம்புகிறேன்—அந்த ஆடவன் யார் என்று மாத்திரம் என்னிடம் கூறிவிடு—என்று வற்புறுத்தினார்—

சு. உம்—உம்—

நா. நான் சொல்லவில்லை! அவர் மீது ஆணையின்படி அதை நான் ஒருவருக்கும் வெளியிடுவதில்லையென்று பிரமாணம் செய்திருப்பதாகக் கூறினேன்

சு. நாகு—உனக்கு—நாகரத்தினம் என்று பெயர் வைத்தது தவறு—ஸ்திரீ ரத்தினம் என்று பெயர் வைத்திருக்க வேண்டும். பிறகு—அதன் பேரில் என்ன நடந்தது?

நா. நான் நிரபராதி என்று கூறியதை—ஏதோ—நம்பித்தானிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்.

சு. ஏன் அப்படி நினைக்கிறாய்?

நா. அவராக—கடைசியில்—அந்த நோயாளியிடம் போய்வா—நான் சந்தோஷமாய் விடையளிக்கிறேன்—என்று சொன்னார்.

சு. வாஸ்தவமாகவா? வாஸ்தவமாகவா?

நா. ஆம்—வாஸ்தவமாக—அன்றியும் அவர் வெள்ளிக்கிழமை தோறும் முக்கியமாக ஸ்ரீ ராமருடைய படத்திற்கு விசேஷ பூஜை செய்கிறது உங்களுக்குத் தெரியுமே—அந்த பூஜையில் வைத்திருந்த புஷ்பங்களில் ஒன்றை என்னிடம் கொடுத்து, உன்னுடைய நோயாளிக்கு இதைக் கொண்டுபோய்க் கொடு—என்று சொன்னார்.

சு. கொண்டுவந்திருக்கிறாயா அப் புஷ்பத்தை?

நா. இதோ—வாங்கிக்கொள்ளும்— [கொடுக்கிறாள்.]

சு. இதைக் கொடுக்கும் பொழுது அவர் ஏதாவது சொல்லிக் கொடுத்தாரா?

நா. ஆம், இதைக் கொண்டுபோய் கொடுத்து—அவரது பாபங்களையெல்லாம் போக்கி—அவரது நோயினின்றும் அவரை நீக்கி—சீக்கிரம் தன்பாதார விந்தங்களில் சேர்த்துக் கொள்ளும் படியாக— என்ராமனை—நான் மனப் பூர்த்தியாகப் பிரார்த்திக்கிறேன்—என்று சொல் என்றார். [அழுகிறாள்.]

சு. ஹா! ஹா! அப்படியா சொன்னார்! மிகவும் சந்தோஷம்! மிகவும் சந்தோஷம். நாராயணா! இப்பொழுதாவது உமக்கு என்மீது கருணை பிறந்ததே!

[அப்புஷ்பத்தை கண்களில் ஒத்திக்கொண்டு, சிரசில் வைத்துக் கொள்ளுகிறார்.]

அப்பா! இனி நான் சந்தோஷமாய்ச் சாகிறேன்!—குழந்தை! அழாதே—நாய்ச்சி, உன் பெண்ணுக்குத்தேறுதல் சொல்வதை விட்டு நீயும் என்ன அழுகிறாய்?—நான் உங்களிருவர் மத்தியில் இறப்பது நலமோ அல்லது கைதியாக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டு இறப்பது மேலோ? என் மனதைக் கலக்காதீர்கள்! என் பிரக்ஞை தப்பும் போலிருக்கிறது—நாய்ச்சி—நான் காலையில் கொடுத்தேனே அந்த உயிலைக் கொண்டுவா இப்படி.—

[படுக்கையின் மீது சாய்கிறார்.]

நாய். இதோ—[பீரோவைத் திறந்து உயிலை அவரிடம் கொடுக்கிறாள்.]

சு. அந்த பவுன்டன் பேனாவை எடு.

[நாய்ச்சியார் அம்மாள் அதை எடுத்துக் கொடுக்கிறாள்.]

சு. என்னை இருவருமாகப் பிடித்துக் கொள்ளுங்கள்.

[நாய்ச்சியாரும் நாகரத்தினமும் அவரைப் பிடித்து படுக்கையின் மீது உட்கார வைக்கின்றனர்; உயிலின் கடைசியில் ஏதோ சில வார்த்தைகளை எழுதுகிறார்.]

நாகு, இதை உன் புருஷனிடம் கொடு.

[தலையணையின் மீது சாய்கிறார்.]

என் வேலை தீர்ந்தது—நாராயணா! நாராயணா!

[உயிர் போகிறது.]

நா. ஐயோ! மூர்ச்சையானார் போலிருக்கிறது!

நாய். இல்லை! இல்லை! எனக்கென்னவோ சந்தேகமாயிருக்கிறது—எதிர் வீட்டுக்குப்போய் டாக்டரைக் கூப்பிட்டுக்கொண்டு வருகிறேன். [விரைந்து போகிறாள்.]

நா. அப்பா!—அப்பா!—என்ன இது? பேச்சு மூச்சு ஒன்றையும் காணோமே!—

திருஞான முதலியாரும், சந்தான ஐயரும், இரண்டு கான்ஸ்டபில்களுடன் வருகின்றனர்.

தி. [படுக்கை யருகிற் சென்று] சுந்தரராஜ முதலியார்! பன்னிரண்டு வருடங்களுக்கு முன் கலெக்டர் உபேந்திரராயரைக்

கொன்றதற்காக, உங்களை அரெஸ்டு செய்கிறேன்—நீங்கள் ஏதாவது பேசினால் பிறகு கோர்ட்டில் அது உமக்கு விரோதமாக உபயோகிக்கப்படும் என்பதை அறிவீராக!

நா. ஹா! உண்மை உங்களுக்குத் தெரிந்து விட்டதா? ஐயோ! —அவர் மிகவும் காயலாயிருக்கிறாரே!—மூர்ச்சையாயினாற் போலிருக்கிறதே!—பேச்சு மூச்சு ஒன்றையும் காணோமே! [தேம்பியழுகிறாள்.]

தி. என்ன! [சுந்தரராஜ முதலியார் உடலை அசைத்துப்பார்த்து] ஓ! என்ன உணர்ச்சியைக்காணோம்! மூச்சுமில்லை! [நாடியைப்பார்த்து] நாடியைக்காணோம்!

நாய்ச்சியார் அம்மாள் டாக்டர் வேங்கடபதி நாயுடுவை அழைத்துக்கொண்டு விரைவில் வருகின்றனர்.

தி. டாக்டர்! சமயத்தில் வந்தீர்கள்! என்ன வென்று பாரும்! எனக்கேதோ சந்தேகமாயிருக்கிறது.

வே. உம்! [பிரேதத்தைப் பரிசோதித்துப் பார்த்து] உயிர் போய் விட்டது.

நாய். ஹா! ஹா! டாக்டர்! டாக்டர்—ஏதாவது இன்ஜெக்ஷன் செய்து பாருங்களேன்!

வே. இனி பிரயோஜனமில்லையம்மா! நேற்றே சொன்னேனே—இன்னும் இரண்டு மூன்று நாட்கள் கூட தாங்குவது கடினம் என்று! ஒன்றும் பிரயோஜனமில்லை.

[நாய்ச்சியார் அம்மாளும், நாகரத்தினமும், சுந்தரராஜ முதலியார் உடலின் மீது விழுந்து அழுகின்றனர்.]

சந். [ஒரு புறமாக] திருஞான முதலியார்—நான் போய் நாயுடுவிடம்—கைதி இறந்து விட்டார் என்கிற சமாசாரத்தைச் சொல்லுகிறேன்.

தி. மிஸ்டர் சந்தானம்!—பொறுங்கள்—ஒரு கைதி—இறந்து விட்டாலும்—மற்றிரண்டு பெயரை நாம் அரெஸ்டு செய்ய வேண்டியிருக்கிறது.

நா. [எழுந்திருந்து திருஞான முதலியாரை நெருங்கி] அவர்—வந்த வேலை நீர்ந்தது! அம்மட்டும் தேவியின் அருளால்—உங்களுடைய சந்தேகம் எல்லாம் நீங்க வழியுண்டாயிற்றே.

தி. நாகரத்தினம்—நில் அப்படியே!—நீ என் கைதி—உன்னை என்கடமைப்படி நான் அரெஸ்டு செய்யவேண்டி யிருக்கிறது!

நா. ஐயோ! இதென்ன இடியின் பேரில் இடியபா!—எதற்காக?—நான் என்ன தப்பிதம் செய்தேன்?

தி. ஒரு நிமிஷம் நான் உன் கணவன் என்பதை மறந்திரு—இப்பொழுது நான் கவர்ன்மெண்ட் சம்பளம் வாங்கும் போலீஸ் உத்தியோகஸ்தன்—என் கடமையை நான் செய்துதான் தீர வேண்டும்—என்ன நேர்ந்த போதிலும். உன் தகப்பனார் ஒரு கொலை செய்ததற்காகப் பன்னிரண்டு வருடங்களுக்கு முன் நியாய பஹிஷ்காரம் செய்யப் பட்டார். ஆகவே அவருக்கு உடந்தையாகி அவரை யார் மறைத்து வைக்கிறார்களோ அவர்களும் சட்டப்பிரகாரம் குற்றவாளிகள்-ஆகவே உன்னை நான் கைதி யாக்க வேண்டியிருக்கிறது—உன்னையும்—உன் தாயாரையும்!

நாய். இப்படி வரும் என்று எனக்கு முன்பே தெரியும்!

நா ஐயோ! அவர் இறந்து விட்டாரே! இன்னமுமா?

தி. அவர் இறந்து விட்டாலும் உங்கள் குற்றம் அதனால் பரிஹரிக்கப்படாது; ஆகவே—உடனே எங்கள் பின்னால்—எங்கள் கைதிகளாக—நீங்களிருவரும் போலீஸ் ஸ்டேஷனுக்கு—உடனே வரவேண்டும்.

நாய். ஐயோ!—இவரை—பிணத்தை—வீட்டில் விட்டா?

தி. ஆம்—நம்முடைய தலைவிதி அது!—நாளை காலை வந்து—அவருக்குச் செய்யவேண்டிய கர்மங்களையெல்லாம்—நாம் செய்வோம் என்று—எனக்குள் ஏதோ தோன்றுகிறது!—ஸ்ரீ ராமன் அருளால்—ஒன்றும் பயப்படாதீர்கள். புறப்படுங்கள் உடனே—டாக்டர், நாளை காலைவரை—இந்த வீட்

டையும்—பிணத்தையும்—நீங்கள்தான் பார்த்துக் கொள்ள வேண்டும்—தயவு செய்து.

வே. ஆகட்டும்—என்ன சட்டமோ உங்கள் சட்டம்! இறந்த பின்னுமா!

தி. என்னை மன்னியுங்கள். [தன் மாமியாரைப் பார்த்து] அம்மா, புறப்படுங்கள் நீங்கள் இருவரும்-நான்கால தாமதம் செய்து விட்டேன்—கான்ஸ்டபில்கள், நடவுங்கள் முன்னே—

[இரண்டு கான்ஸ்டபில்கள் முன்னால் போக, அழுது கொண்டே நாய்ச்சியாரும் நாகரத்தினமும் பின் தொடர, கடைசியில் திருஞான முதலியாரும் சந்தானம் ஐயரும் புறப்படுகிறார்கள்.]

சந். [போகும் போது] உன் மனசு—என்ன கல் மனசப்பா!

தி. ராமா!—ராமா! [போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

## நான்காம் காட்சி.

இடம்:—போலீஸ் ஸ்டேஷனில் ஸ்பெஷல் லாக் அப் அறை.

காலம்:—இரவு.

நாகரத்தினம் அடைபட்டிருக்கிறாள்—ஒரு புறம் விளக்கு மெல்லியதாய் எரிந்துகொண்டிருக்கிறது.

நா. "உன் கற்பை ஸ்ரீ ராமன் காப்பாற்றுவாராக" என்று அவர்—ஏன் சொன்னார்? அவ்வார்த்தைகளைக் கேட்டது முதல் என் நெஞ்சம் பதை பதைக்கிறதே! என் தகப்பனார் இறந்தது கூட எனக்குத் துக்கத்தைத் தரவில்லை-ஒரு விதத்தில் அவர் இறந்ததே மேலாகும். ஆயினும் இறந்து போன அவரது உடலை விட்டு அவர் பெண்ணாகிய நான் பிரிக்கப்பட்டு இச் சிறைச் சாலையில் அடை படவேண்டுமா? அவர் மனம் துணிந்ததே! ஆயினும் அவர் மீது நான் குறை கூறலாகாது. அவர் நியாயச் சட்டப்படி நடக்க வேண்டியது தானே! என்னை இச் சிறைச் சாலையில் அடைத்ததும் எனக்கு துக்கம்

தர வில்லை. நான் ஏதாவது சட்டத்துக்கு விரோதமாகச் செய்திருந்தால் அதற்காக நான் தண்டிக்கப்பட வேண்டியது தானே! இவைகளெல்லாம் எனக்கு அத்தனை பயம் தர வில்லை—என் கணவர் சொன்ன வார்த்தைகள் மாத்திரம் எனக்கு அவ்வளவு பயத்தைத் தருகின்றன! அன்றியும் என் தாயாரும் நானும் ஒரே லாக்கப்பில் அடைபட்டிருக்க, என்னை மாத்திரம் அச் சேவகன் பிரித்து, இங்கு ஏன் அழைத்துக் கொண்டுவந்து விட்டான்—இந்த நடுராத்திரியில்? ஏதோ எங்களிருவரிட மிருந்து தனித் தனியாக வாக்குமூலம் வாங்க வேண்டுமென்று சொன்னான்! எனக்கேதோ மிகவும் சந்தேகமாயிருக்கிறது! பயமாகவு மிருக்கிறது! என் கணவர் கூறிய மொழிகளையும் இங்கு நடந்ததையும் யோசித்துப் பார்க்கு மிடத்து என் கற்பிற்கு ஏதேனும் ஆபத்து சம்பவிக்குமோ என்று என் மனதில் திகிலுண்டாகிறது! என்ன என் ஹிருதயம் இவ்வாறு துடிக்கிறதே!—தேவீ! தேவீ! நீர்தான் என்னையும் என் கற்பினையும் காத்தருள வேண்டும்.

[இரும்பு கிராதியின் வழியாக துணியில் சுற்றப்பட்ட ஒரு சாமான் விழுகிறது.]

ஆ!—இது என்ன! யாரோ வெளியிலிருந்து இதைப் போட்டிருக்கிறார்கள்! என்ன வென்று பிரித்துப் பார்ப்போமா? [அதை மெல்ல எடுத்து]

ஏதோ துணியில் சுற்றப்பட்டிருக்கிறது. [அதைப் பிரித்து] மலையாளக் கத்தி!—சரி! கடைசியாக என் கற்பிற்குப் பங்கம் வராமல் கார்க்கும் வழியை—கடவுள்—எனக்கருளினார்!—யார் இதைப் போட்டிருக்கக் கூடும்? இதை நான் மறைத்து வைத்துக் கொள்ள வேண்டும்—யாரோ வருகிற சப்தம் கேட்கிறது. [அப்படியே செய்கிறாள்.]

ஒரு கான்ஸ்டபில் பின் தொடர பரமாநந்த நாயுடு மெல்ல வருகிறார்.

ப. கான்ஸ்டபில்! அந்த நாற்காலியை இக்கதவோரம்போடு— [அவன் அப்படியே செய்கிறான்.]

அந்த சின்ன டிபாயை இப்படி போடு—அதன் பேரில் இங்கி புட்டி பேனு காகிதம் எல்லாம் இருக்கிறது, அப்படியே அசைக்காமல் இங்கு கொண்டு வந்துபோடு.

[கானஸ்டபில் வெளியே போய் டிபாயைக் கொண்டு வந்து போடுகிறான்.]

நீ இனி உன் டியூடிக்கு (duty) ப் போ.

[கான்ஸ்டபில் போகிறான்.]

உம்!—நாகரத்தினம்.

நா. [மெல்லிய குரலுடன்] ஏன்?

ப. இப்படி என் எதிராக வந்து நில்—உன்னிட மிருந்து ஒரு ஸ்டேட்மென்ட் வாங்கவேண்டும்—

[சற்று தூரத்தில் வந்து நிற்கிறாள்.]

என்ன அங்கே நிற்கிறாய்?—இப்படி வந்து நில்—

[சற்று அருகில் வந்து நிற்கிறாள். ஏதோ எழுது வது போல் அபிநயித்து.]

பெயர்—நாகரத்தினம்—வயது என்ன?

நா. இருபத்தெட்டு.

ப. இருப்பிடம்?

நா புரசைவாக்கம் வெள்ளாழத் தெரு.

ப. உன் பேரில் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பாக உபேந்திர ராயர் என்பவரைக் கொன்ற தற்காக, நியாத்தினின்றும் பஹிஷ்கரிக்கப் பட்ட குற்றவாளியாகிய சௌந்திர ராஜ முதலியார் என்பவரை, போலீசாருக்குத் தெரிவிக்காமல், அடிபட்ட பிள்ளையார் கோவில் வீதியில் 23வது நம்பர் வீட்டில் வைத்திருந்ததற்காகக் குற்றம் சாற்றியிருக்கிறார்கள். அதற்கு என்ன சொல்கிறாய்?

நா. அது என் தாயார் வீடு—அங்கு சாகக் கிடந்து யிருந்த—என் தகப்பனார் வந்து சேர்ந்தால்—நான் அதற்காக என்ன செய்வது?

ப. அக் குற்றவாளி அவ் வீட்டிலிருப்பதை அறிந்தும் அதை போலீசாருக்குத் தெரிவிக்காதது குற்றம்.

நா. என் தகப்பனுரை—நானே—போலீஸ்காரர் வசம்—காட்டிக் கொடுக்காததா குற்றம்?

ப. ஆம்.

நா. நாயுடுகாரு—இதென்ன அநியாய மாயிருக்கிறது! தகப் பனுர் குற்றஞ் செய்தால் அதை அவரது பெண்டு பிள்ளை களே உத்தியோகஸ்தர்கள் வசம் தெரிவிக்க வேண்டுமா? புருஷன் குற்றஞ் செய்தால், அவரது பெண்சாதி அவரை போலீஸ் வசம் ஒப்புவிக்க வேண்டுமா? இதுவா நியாய சட் டம்?

ப. ஆம்.

நா. அந்த அநியாய சட்டத்தை நீங்கள் கொஞ்சம் தயவு செய்து மாற்றக் கூடாதா?

ப. நானு மாற்றுவது! அச்சட்டம் உண்டாக்கியவர்களிடம் போய்ச் சொல்—அதிருக்கட்டும்—உன்னிடம் இக்கதை யெல்லாம் பேசிக் கொண்டிருக்கக் காலமில்லை-இப்பொழுது நீ குற்றவாளி என்கிருயா இல்லையா?

நா. சட்டம் அப்படி அநியாயமாயிருந்தால்—நான்—அநியாயக் குற்றவாளி என்று ஒப்புக் கொள்ள வேண்டியதுதான்.

ப. என்ன நிரம்ப அதிகமாய்ப் பேசுகிருய்! நீ பேசுவதில் மிகவும் கெட்டிக்காரி என்று கேள்விப்பட்டேன், அது இப்பொழுது தான் தெரிகிறது — அதெல்லாம் இருக்கட்டும் — இப் பொழுது என்ன செய்யப் போகிருய்?

நா. நான் என்ன செய்யக்கூடும்? நான் பெண்பால்! நீங்கள்தான் தயவு செய்து இதனின்றும் தப்பு வதற்கு ஏதாவது வழி சொல்ல வேண்டும்.

ப. உம்—வழிக்கு வந்தாயா! சொல்லுகிறேன்—முதலில் இக் குற்றத்திற்காக உன்னை போலீஸ் கோர்ட்டில் ஆறு மாதத் திற்கு கடுங்காவல் சிட்சை விதிக்கக் கூடும் தெரியுமா?

நா. தெரியாது—நீங்கள் சொல்லும் பொழுது அது வாஸ்தவமா கத்தானிருக்க வேண்டும்.

ப. அப்படி — குறைந்த பட்சம் ஆறுமாதம் ஜெயிலுக்குப் போகிறாயா?

நா. என் தலையில் அப்படி நேரிட வேண்டு மென்றிருந்தால்— அது நடந்துதான் தீரும்.

ப. விதி! எல்லாவற்றிற்கும் விதி ஒன்று இருக்கிறாற் போலிருக்கிறது! விதி என்பது என்ன அது?

நா. பரமாத்மாவின் எண்ணம்.

ப. உம்! உம்! அந்த பரமாத்மாவை கண்டிருக்கிறாயா நீ?

நா. நான் பார்த்ததில்லை—அவரைப் பற்றி பெரியோர்கள் கூறுவதை நம்புகிறேன்.

ப. உம்—அந்த வேதாந்த மெல்லாம் அப்புறம் இருக்கட்டும்— இப்பொழுது—இந்த கதியினின்றும் தப்புவதற்கு—ஏதாவது— மார்க்கம்—உனக்கு—தோற்ற வில்லையா?

நா. எனக்கு—ஒன்று—தான் தோன்றுகிறது.

ப. ஆ! — என்ன அது சொல்பார்ப்போம்—ஒன்றும் பயப்படாதே.

நா. அந்த பரமாத்மாவைக் குறித்து—பிரார்த்திப்பதுதான்.

ப. அடே! இதையா கூறவந்தாய்! வேறு என்னவோ—மார்க்கம் சொல்லப் போகிறா யென்றல்லவோ பார்த்தேன்.

நா. எனக்கு வேறுமார்க்கம்—ஒன்றும் தோன்றவில்லை.

ப. நாகரத்தினம்—நீ நிரம்ப புத்திசாலி—கொஞ்சம் நன்றாய் யோசித்துப் பார்—உனக்கே தோற்றும்.

நா. ஐயோ! எனக்கு ஒன்றும் தோற்ற வில்லையே—சரியான மார்க்கம்—

ப. உம்—சரியான மார்க்கம் ஒன்றும் தோன்றவில்லை—ஏதாவது தப்பான மார்க்கம் தோன்றுகிறதா—பார்.

நா. தப்பான மார்க்கம் என் மனதில் ஒன்றும் தோன்றாதே!

ப. ஐயோ! பாபம்! நிரம்ப பதிவிரதை! உனக்கு ஏன் தோன்றப் போகிறது! உன் கணவனே உன்னைப் பற்றி சந்தேகப்

பட்டது எனக்குத் தெரியாதென்று நினைத்துக் கொண்டிருக்கிருய் போலும்.

நா. அப்படி சந்தேகித்தது கூட—முற்றும் நீங்கிற்று—தங்கள் தயவினுல்—என்று கூறினுரே.

ப. அடடா! அதை அவனுக்குச் சொல்லாமலிருந்தால் ஒரு விதத்தில் நலமாயிருக்கும் போலிருக்கிறதே! இப்படியே பேசிக் கொண்டிருந்தால் வீண் காலம் தான் போகும்—நாகரத்தினம்—என் குணத்தைப் பற்றி—ஏதாவது கேள்விப் பட்டிருக்கிருயா?

நா. கேள்விப்பட்டிருக்கிறேன்—என் கணவனிட மிருந்து—அவரைத் தாங்கள் சொந்த பிள்ளையைப்போல் அன்பு பாராட்டி, நீங்கள் இந்த நல்ல ஸ்திதிக்குக் கொண்டு வந்திருக்கிறீர்—என்று—இதை நினைக்கும் பொழுதெல்லாம்—அவர் உமது நற் குணத்தைப் பற்றி புகழாத காலமில்லை!

ப. இதென்னடா இது! எந்த வழி போனுலும் கஷ்டமாயிருக்கிறது! இனி ஸ்பஷ்டமாய்ச் சொல்ல வேண்டியதுதான்—நாகரத்தினம், நீ செய்திருக்கும் குற்றத்தினின்றும் தப்பித்துக் கொள்ள ஒருமார்க்கம் தானிருக்கிறது—பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் கலெக்டர் உபேந்திரராயரைக் கொன்றவன் உன் தகப்பனுர் என்பது, எனக்கும், உன் புருஷனுக்கும் மாத்திரம் தெரியும், இதைப் பற்றிய காகிதங்கள் எல்லாம் என்கையிலிருக்கின்றன. ஒருவார்த்தை மாத்திரம் நீ கூறுவாயானுல், இக் காகிதங்களை எல்லாம் உன் எதிரிலேயே, கொளுத்தி விடுகிறேன்—நீ நாளை காலை உன் வீட்டிற்குப் போய்—இறந்து கிடக்கும் உன் தகப்பனுருக்குச் செய்ய வேண்டிய சடங்குகளை யெல்லாம் செய்யலாம்—உன் மீதும் யாரும் ஒருபழியும் சாற்ற மாட்டார்கள்.

நா. என்ன—அந்த—ஒருவார்த்தை?

ப. [மெல்லிய குரலுடன்] இன்றிரவு— எனக்கு—இணங்குவதாகச் சொல்.

நா. ஹா! தேவி! தேவி!—நாயுடுகாரு! இந்த பெரும்பாபத் திற்கு உட்படும் படியாக நீங்கள்—வாயார—என்னைக் கேட்க லாமோ?

ப. பாபமும்—புண்ணியமும்! இந்தக் கதையெல்லாம் எனக் குத் தெரியும்—நான்—சொல்வதைக்கேள்—இந்த ரகசியம் ஒருவருக்கும் தெரிய வேண்டியதில்லை.

நா. நாயுடுகாரு—என்ன தாங்களே இப்படி மறந்து பேசுகின் றீர்கள்?— எள்ளுக்குள் எண்ணைபோல் எங்கும் நிறைந் திருக்கும் பரமாத்மாவிற்கு இது தெரியாமற் போகுமா? நம்முடைய கர்மாக்களுக்காக அவருக்கு ஒரு காலம் நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டுமென்பதை மறக்கலாமா நீர்? நீர் நாஸ்திகர் அல்லவே!—நீ ஏன் இப்படிப் பட்ட மஹா பாதகம் இழைத்தாய் என்று அவர் உம்மை கேட்பாராயின் அப்பொழுது என்ன பதில் சொல்வீர் அவருக்கு? நானும் உமக்கு உடன் படுவேனாயின்—அவருக்கு என்னபதில் சொல்லக் கூடும்?

ப. பரமாத்மாவாவது! கிரமாத்மாவாவது! இந்தப் புஸ்தகத்தை யெல்லாம் நம்பாதே! மேல் நாட்டார்கள் இப்பொழுது சாஸ் திர ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்திருக்கிறபடி—எல்லாம் சுபாவமே யொழியவேறொன்று மில்லை.

நா. நாராயணா! நாராயணா!—இப்பாபச் செயலுக்கு நான் உடன் படு வேனாயின் நீர்தான்—பிறகு என்னை மதிப்பீரா?

ப. அதைப் பற்றிச் சந்தேகப் படவேண்டாம் — உன்னிடம் எனக்குள்ள மதிப்பு கொஞ்சமும் குறையாது.

நா. நான் நம்ப வில்லை—நாயுடுகாரு— நான் கடைசி வார்த்தையா கச் சொல்கிறேன்—இப் பெரும்பழிக்கு உட்பட்டு, பிறகு அரைக்ஷணம் உயிரைத் தரிப்பேன் என்று நினைக்கிறீர்களா?

ப. உடனே செத்துப்போய் விடுவாயோ? இம்மாதிரி பேசியவர் களை அநேகரைப் பார்த்திருக்கிறேன்—இப்படி கதை பேசிக் கொண்டிருந்தால் இரவெல்லாம் கழிந்துபோகும்—என்ன சொல்லுகிறாய்?

நா. நாயுடுகாரு! நில்லுங்கள் அப்படியே! என் கையில் என்ன இருக்கிறது கண்டீரா? இதைக் கொண்டு என் கற்பைக் காத்துக் கொள்ளும் வகையினை கடவுள் எனக்கு அருளியிருக்கிறார்! — ஒரு அடி என்பக்கம் எடுத்து வைப்பீராயின் என் உயிரை மாய்த்துக் கொள்வேன் — இது சத்தியம்!

ப. [திடுக்கிட்டு நின்று, பிறகு ஒருவாறு சிரித்து] நாகரத்தினம்! நீயொருத்தியே இவ்வுலகில் பதிவிரதை! உன் புருஷன் உன் கற்பிற்கு மெச்சிப் பேசிய பொழுது அதன் உண்மையைக் கண்டறிந்து மகிழ வேண்டு மென்றே, உன்னை இவ்வாறு பரிசோதித்தேன் என்று உறுதியாய் நம்பு. இல்லாவிடின் பரமாத்மாவின் பாதார விந்தம் போய்ச் சேரவேண்டிய இவ் வயதில் இச் சிற்றின்பங்களை யெல்லாம் விரும்புவேன் என்று நம்புகிறாயா? மிகவும் சந்தோஷம்! மெச்சினேன் உன்னுடைய உத்தம குணத்தை — இனி நீ இந்த அறையைவிட்டுப் போகலாம் — பொறு — உன் மீது எனக்குள்ள நம்பிக்கையைக் காட்டவும், அன்றியும் வேறு யாரும் உன் மீது குற்ற வாளியை மறைத்து வைத்த குற்றஞ் சாற்றா திருக்கும் பொருட்டும், இக்காகிதங்களை உன் எதிரிலேயே கொளுத்தி விடுகிறேன் பார்!

[அக்காகிதங்களை மறைத்து வேறு சில வெறுங் காகிதங்களை தீக்குச்சியால் கொளுத்தி விடுகிறார்.]

தீர்ந்தது! இனி உனக்கு ஒரு பயமும் வேண்டாம் — நாகரத்தினம்! போ — உன் தாயாரை அழைத்துக் கொண்டு, உன் தகப்பனாரிண்டை போய் — நாளை காலை அவருக்குச் செய்ய வேண்டிய கர்மங்களை யெல்லாம் செய்.

நா. நாயுடுகாரு! உங்களுக்குக் கோடி நமஸ்காரம்! நான் வருகிறேன் — ஸ்ரீமந்நாராயணன் உமக்கு நன்மை புரிவாராக!

[அவரைத்தாண்டிக்கொண்டு வெளியே போகப் பார்க்கிறாள், அப்படிச் செய்யும்போது]

ப. [திடீரென்று அவள் கரத்திலிருந்த கத்தியைப் பிடுங்கிக்கொண்டு அவள் கரத்தை கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு] நாகா! இப்

பொழுது என்ன செய்யப் போகிருய்? என் கையினின்றும் தப்பலாமென்று பார்த்தாயா! யமன் கையில் அகப்பட்ட உயிராவது தப்பும், நீ என் கரத்தினின்றும் தப்புவது அரிது—இனி ஒரு வார்த்தையும் பேசாதே! இனி தப்ப வழியில்லை! எனக்கிணங்கவேண்டியதுதான்! ஏதாவது கூச்சல் கீச்சல் போட்டாயோ, அப்படியே குத்திக் கொன்று விடுவேன்—பிறகு இங்கு என் ஆர்டர்லியுடன் தவருக நடந்துக்கொண்டிருந்ததை நான் அகஸ்மாத்தாய்க் கண்டு பிடிக்க, அந்த அவமானம் பொறுக்காமல்—தன்னையே குத்திக்கொண்டு மடிந்தாள் என்று உன் புருஷனிடம் சொல்லி விடுவேன்!

நா. நாயுடுகாரு! நீங்கள் பெரியவர்கள் — எல்லாநியாயமும் தெரிந்தவர்கள்! நான் பேதை பெண்பால்! நான் உங்களுக்கு என்ன சொல்லப் போகிறேன்? இது உங்களுக்கு அடுக்குமா? இப்படி பெண்பாலாகிய என்னை நீங்கள் மோசம் செய்யலாமா? இப்பழிக்கு என்றைக்காவது ஒரு நாள் நீங்கள் உத்தரவு சொல்லவேண்டாமா? அரசன் அன்றுறுக்கும் தெய்வம் நின்றுறுக்கும் என்பதை மறவாதீர்! இந்த ஜன்மத்திலில்லா விட்டாலும் எந்த ஜன்மத்திலாவது நீங்கள் இப்பெரும் பாதகத்திற்கு பிராயச்சித்தம் செய்ய வேண்டாமா? இந்த ஜன்மத்திலேயே இதன் பலனைத் தாம் அனுபவிக்க வேண்டிவரினும் வரும் என்பதை நினையும் சற்று! நான் வேறு அதிகமாய்ச் சொல்வதற்குத் தெரியாது. என் கடைசி வார்த்தையாக இதை சற்று கவனியும். நீர் என்னை பலவந்திப்பது போல், நீர் அக்னிசாட்சியாய் மணந்த உமது மனைவியை அந்நியனொருவன் இவ்வாறு பலாத்காரம் செய்யத் தொடங்கினல் உம்முடைய ஹிருதயமானது எவ்வாறு யமவாதனை உறும்? கொஞ்சம் தயை செய்து யோசியும்

ப. சி! பேசாதே! இனி—ஒருவார்த்தையும்!

நா. சீதாராமா! சீதாராமா! இனி நீரே கதி!

ப. சீதா—ழ—ழா—[வாய்குளறி இடது புறம் பாரிசவாய்வினல்

திடீரென்று பீடிக்கப்பட்டு, அவள் கரத்தை நழுக விட்டு, கீழே விழுகிறார்.]

நா. ஐயோ! நாயுடுகாரு! என்ன உடம்பு உங்களுக்கு—இடது புறம் ஏன் இப்படி வலிக்கிறது! நாக்கு குழறுகிறதே! பாரிசவாய்வா என்ன? அந்தோ! என்னால் உமக்கு இக்கதி வாய்க்கவேண்டுமோ? பரந்தாமா! பரந்தாமா! இவருக்கு அருள்புரியும் பாபம்! ஐயோ! பேதை நான் என் செய் வேன்!—ஐயா! ஐயா! இங்கு ஒருவரும் வெளியில் இல்லையா! நாயுடுகாருக்கு உடம்பு ஏதோ மிகவும் அசௌக்கியமாகிக் கீழே விழுந்து விட்டார்! கீழே விழுந்து விட்டார்!

கான்ஸ்டபில் விரைந்து அறைக்குள் வருகிறான்.

கா. என்னம்மா! என்ன சமாசாரம்?

நா. அப்பா! நான் என்ன சொல்லப்போகிறேன்! நாயுடுகாரு என்னிடம் ஏதோ ஸ்டேட்மென்ட் வாங்கிக்கொண்டிருந் தார்! பிறகு ஏதோ பேசிக்கொண்டிருக்கும்பொழுது திடீ ரென்று இடது பக்கம் வலித்தது, வாய்குழறி கீழே விழுந்து விட்டார்! என்ன வென்றுபார்! சீக்கிரம்.

கா. [நாயுடுவின் இடது கையைத் தூக்கிப்பார்த்து, தலையை அசைத்து] பாரிசவாய்வு—வயித்தியர் அப்பொழுதே சொன்னார்!— உம் [தனக்குள்] தக்க தண்டனை! வேண்டும். சொன்னால் கேட்டால் அல்லவோ!

[அங்கிருந்த கத்தியை மெல்ல எடுத்து தன் சட்டைக் குள் மறைத்து வைத்துக்கொள்கிறான்.]

நா. அப்பா! இதோ கண்விழிக்கிறார்!—ஏதோ சைகை செய் கிறார் பார்!

ப. உம்—உம்—[வலது கையால் சைகை செய்கிறார்—கான்ஸ்டபில் அருகில்வர அவனுக்கு ஏதோ சைகை செய் கிறார்.]

கா. பேபர்—பென்சிலா? வேணும்?

ப. உம்—உம். [தலையை அசைக்கிறார்.]

கா. இதோ கொண்டு வருகிறேன். [வெளியிற் போகிறான்.]

நா. நாம் வெளியில் ஓடிப்போய் விடலாமா ? சீச்சீ! அது தவறு; இவரை இந்த ஸ்திதியில் விட்டுப் போவது பாபமாகும்—இவ்வளவு தூரம் என்னைக்காத்திட்ட பரமாத்மாவின் அருள் எனக்கிருக்கும் வரையில், எனக்கென்ன பயம் !

கான்ஸ்டபில் மறுபடியும் வருகிறான்.

கா. எல்லாம் பூட்டிக்கொண்டு போய் விட்டார்கள்—இதோ மேஜையின் பேரில் இருக்கிறதே காகிதமும் பௌன்டன் பேனாவும் !

ப. உம் ! [அவைகளை அருகில் கொண்டுவரும்படி சைகை செய்கிறார், கான்ஸ்டபில் அப்படியே செய்ய, அதில் ஏதோ எழுதிக் கான்ஸ்டபில் கையில் கொடுக்கிறார், வலது கரத்தால்.]

கா. [அதைப்படிக்கிறான்] "என்னை மெல்ல தூக்கி உட்காரவை" [அப்படியே செய்கிறான்.]

நா. நானும்—ஒரு பக்கம்—பிடிப்பதா ?

ப. உம்—உம் [வேண்டாமென்று சைகை செய்கிறார் பிறகு மறுபடியும் காகிதத்தில் ஏதோ எழுதி கான்ஸ்டபில் கையில் கொடுக்கிறார்.]

கா. [படிக்கிறான்.] "மேஜையின் பேரில் இருக்கும் காகிதங்களை யெல்லாம் கொளுத்தி விடு"—சந்தோஷம். [தனக்குள்] இவைகளெல்லாம் தொலைந்தால்தான் சனி ஒழியும். [அவைகளைக் கொளுத்துகிறான்.]

திடீரென்று திருஞான முதலியார் கதவண்டை தோன்றுகிறார்.

நா. ஆ ! வந்தீர்களா ! [அவரைக் கட்டிக் கொள்கிறாள்.]

தி. என்ன சமாசாரம் !—கான்ஸ்டபில் ! என்ன இக்காகிதங்களை யெல்லாம் கொளுத்துகிறாயே !

கா. எஜமான் உத்தரவு. [அவர் எழுதிய காகிதங்களைக் காண்பிக்கிறான்.]

தி. என்ன அவருக்கு ?

கா. பாரிச வாயு—இடதுகையும் காலும் விழுந்து விட்டது! வாயடைத்து விட்டது—

ப. உம்! [தன் அருகில் வரும்படி செய்கை செய்கிருர், பிறகு கான்ஸ்டபிலுக்கு அக்காகிதத்தைக் கொடுக்கும் படி செய்கை செய்து வாங்கி, அதில் ஏதோ கஷ்டப் பட்டு எழுதி அதை திருஞான முதலியாரிடம் கொடுக்கிருர்.]

தி. [அதை வாசிக்கிருர்] "உன்னுடைய மனைவி—உத்தம பத்தினி—அவளுக்குத் தீங்கிழைக்க எண்ணி—இக்கதிக்கு வந்தேன்—எனக்குத் தக்க பிராயச் சித்தம்—பரந்தாமன் எனக்கு இப்பொழுதுதான் புத்தி காட்டினுர். நான் சாகிறேன்—நீங்களிருவரும்—என்னை மன்னிக்கும்படி—வேண்டுகிறேன்"

தி. நாயுடுகாரு—மன்னித்தேன்! உம்மை மனப் பூர்வமாக மன்னித்தேன்!

நா. நாயுடுகாரு—நானும் மன்னித்தேன்—ஏதோ என் பூர்வ கர்மாவினுல்தான் இவ்வாறு கொஞ்சம் மனத்துயரையடைய வேண்டு மென்றிருந்தது போலும்—அதை யெல்லாம் மறந்துவிட்டேன்—ஐயோ! என்னுல் உங்களுக்கு இக்கஷ்டம் நேர்ந்ததே! நீங்கள் எப்படியாவது பிழைத்து சுகப்பட—

ப. உம்! [வலது கையால் முடியாது என்று சொல்லி விட்டு, அக்காகிதத்தை வாங்கி அதில் மறுபடியும் எழுதிக் கொடுக்கிருர்.]

தி. [அதை வாசிக்கிருர்]"அது அசாத்தியம்—வயித்தியர்—இரண்டாம் முறை இப்பாரிசவாயு தாக்கினுல்—பிழைக்கமுடியாது என்று— முன்பே சொல்லி விட்டார்!—உங்கள் மீது ஒரு குற்றமு மில்லை—நான் விடை பெற்றுக் கொள்கிறேன். பரந்தாமன் பாதார விந்தம் போய்ச் சேர! அப்பா, திருஞானம்—உன் மனைவியை உன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டுபோய் விட்டுவிட்டு வந்து—என்னையும் என் வீட்டிற்கனுப்பு"—நாயுடுகாரு, என் மனைவிக்கு ஒன்றும் அவசர

யில்லை—முதலில் உம்மை உமது வீடு சேர்த்து, வைத்தியரை அழைத்துக்கொண்டு வருகிறேன்—கான்ஸ்டபில், அந்த பக்கம் பிடி நாயுடுகாரை.

ப. உம்! [காகிதத்தில் மறுபடியும் எழுதிக்காட்டுகிறார்.]

தி. [அதைவாசிக்கிறார்] "எனக்கு புத்திபுகட்டிய லட்சுமி தேவியாகிய—என் தாயாராகிய-உன் மனைவிக்கு நான் பாத பூஜை செய்யவேண்டுகிறேன் — என்னைத் தூக்கி உட்காரவையுங்கள் அவள் பாதத்தருகில்"—நாயுடுகாரு — இதென்ன விது? உமக்கேனிந்த கஷ்டம்? அவள் தான் மன்னித்து விட்டாளே உம்மை.

ப. பா—பா— [வாய் குழறி—திருஞான முதலியார் முகவாய்க் கட்டையை வலது கரத்தால் பற்றுகிறார்.]

ஆனால் சரி உங்களிஷ்டம்.

நா. ஐயோ! வேண்டாம்! வேண்டாம்!

தி. தடுக்காதே, அவர் இஷ்டப்படி செய்யட்டும்.

[இருவருமாக நாயுடுவை உட்கார வைக்க, அவர் தன் வலது கரத்தால் ஙாகரத்தினத்தின் இருபாதங்களையும் தொட்டு தன் கண்களில் ஒத்திக்கொள்ளுகிறார்.]

நா. பரந்தாமன் உமக்கு அருள்புரிவாராக! சீக்கிரம் அழைத்துக்கொண்டு போங்கள் டாக்டரிடம்—நான் இங்கிருக்கிறேன். எனக்கு ஒன்றும் பயமில்லை—

[திருஞான முதலியாரும் கான்ஸ்டபிலுமாக நாயுடுவைப் பிடித்துக்கொண்டு அறைக்கு வெளியே போகின்றனர்.]

ஐயோ பாபம்! நம்மால் இவருக்கு—இக்கதி வாய்க்கவேண்டுமா? ஐயோ! நான் ஏன் என் வாயால் அவரை வைதேன்! அவர் தவறிழைத்தால்—அதைப்பார்த்துக்கொள்ளவேண்டியது பரமாத்மாவின் வேலையாகும்!—என்வாயால்—நான்

இந்த ஜன்மத்திலேயே தாம் தமது துர் எண்ணத்தின் பலனை அனுபவிக்க வேண்டிவரினும் வரும்—என்று ஏன் சொன்னேன்! ஐயோ! அப்படியே பலித்து விட்டதே—பரமாத்மா! என்னை மன்னிப்பீராக!

திருஞான முதலியார் வருத்தத்துடன் திரும்பிவருகிறார்.

என்ன! இதற்குள் வந்து விட்டீர்களே?

[நாற்காலியில் உட்கார்ந்து] உயிர் போய் விட்டது.

[கையினால் தன் கண்களை மறைத்துக்கொள்கிறார்.]

ஐயோ! பாபம்! எப்படி? எப்பொழுது?

அவர் காரில் கொண்டு போய் வளர்த்திய உடன்.

[தூக்கிக்கிறார்.]

ஐயோ பாபம்! பரமாத்மா அவருக்கு நற்கதி அளிப்பாராக, வருகிற ஜன்மத்திலாவது!

[எழுந்திருந்து, அவளைக்கட்டி யணைத்து] கண்ணு! நீயே உத்தம பத்தினி!—ராமா! எல்லாம் உனது கருணை!

[திரை விழுகிறது.]

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றியது